**கீரை விதைகள் வழங்கும் விழா**

First Published : 05 May 2010 12:59:25 AM IST

உத்தரமேரூர், மே 4: பவுஞ்சூரில் பழங்குடியினருக்கு பழ, கீரை விதைகள் அண்மையில் வழங்கப்பட்டன.
தோட்டக்கலைத் துறை பவுஞ்சூர் பகுதியில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பழங்குடியினருக்கு 50 சதவீத மானிய விலையில் மேற்கிந்திய செர்ரி பழ கன்றுகளும், சிறுகீரை விதைகளும் வழங்கப்பட்டன. செய்யூர் கிராம பழங்குடியினர் குடியிருப்பில் தோட்டக்கலைத் துறை மூலம் ஊராட்சிமன்றத் தலைவர் பாபு இவற்றை வழங்கினார்.
தட்டாம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் சங்கர், வடிவேலு தலைமையில் இருளர் இன பழங்குடி மக்களுக்கும், மேற்கிந்திய செர்ரி பழத்தில் விட்டமின் சி சத்து அதிகளவில் உள்ளதால் பழங்குடியினர் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு உகந்தது என்பதனால் வழங்கினார்கள்.
÷இத்திட்டத்தில் 50 சதவீதம் மானியம் போக மீதம் விவசாயிகள் செலுத்தவேண்டிய தொகையை களஞ்சியம் தொண்டு நிறுவனமும், பொறியாளர் தாமரைக்கண்ணன் ஆகியோரும் வழங்கினர். பழங்குடியினர் குடியிருப்பில் கன்றுகள் நட்டு உதவிய பெரியார் துல்லிய பண்ணை சங்க விவசாயிகளுக்கு கதிரேசன் நன்றி கூறினார். இத்திட்டத்தை பவுஞ்சூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் இரஞ்சன்பால் தலைமையில் உதவி இயக்குநர்கள் ஏழுமலை ராமலிங்கம் ஆகியோர் செய்திருந்தனர்.

**கரிசல்பட்டியில் தெளிப்புநீர் பாசனத் திடல் அமைப்பு**

First Published : 05 May 2010 02:46:10 AM IST

அம்பாசமுத்திரம், மே 4: சேரன்மகாதேவி அருகே கரிசல்பட்டியில் துவரை தெளிப்புநீர் பாசனத் திடல் அமைக்கப்பட்டுள்ளது. இதை வேளாண் இணை இயக்குநர் சுப்பிரமணியன் ஆய்வு செய்தார்.
வேளாண் துறை மூலம் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், சேரன்மகாதேவி வட்டாரத்தில் பயறு சாகுபடி பரப்பை அதிகரிக்கும் வகையில் பயனாளிகளுக்கு மானிய விலையில் தரமான விதை, இடுபொருள்கள் வழங்கப்பட்டது.
இப் பகுதியைச் சேர்ந்த இருவருக்கு ஹெக்டேருக்கு தலா ரூ.20,000 வீதம் மானியத்தில் துவரை சாகுபடி விதை, இடுபொருள்கள் வழங்கப்பட்டன.
மேலும் உளுந்து, நிலக்கடலை பயிர் சாகுபடி செய்துள்ள பயனாளிகள் 4 பேருக்கு ஹெக்டேருக்கு 50 சதவீதம் மானியமாக ரூ. 7,500 வீதம் வழங்கப்பட்டது.
இத் திட்டத்தின் கீழ் கரிசல்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள துவரை தெளிப்புநீர் பாசனத் திடலை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சுப்பிரமணியன் பார்வையிட்டார்.
மாவட்ட வேளாண் துணை இயக்குநர் துரைபாண்டியன் (திட்டம்), வேளாண் உதவி இயக்குநர் ஜெயசெல்வின் இன்பராஜ், வேளாண் அலுவலர் பரமசிவன் மற்றும் துணை வேளாண் அலுவலர்கள், களப்பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

**சுவை குறைவு மாம்பழ விற்பனை "படு மந்தம்'**

First Published : 05 May 2010 03:58:09 AM IST



கடலூர்,மே 4: கடலூரில் மாம்பழ வரத்து தொடங்கியது. எனினும் மாம்பழங்கள் உரிய சுவை இல்லாததால், மக்களிடையே போதிய வரவேற்பு இல்லை என வியாபாரிகள் தெரிவித்தனர்.

முக்கனிகளில் முதல் இடத்தில் இருக்கும் மாம்பழங்கள், கோடை காலத்தில் மக்களின் நாவிற்குச் சுவையூட்ட வந்து குவிந்துவிடும். மார்ச் 15-ம் தேதிக்கு மேல் மாம்பழங்கள் சந்தைக்கு வந்து விடுவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு கடந்த 15 நாள்களாகத்தான் கடைகளில் மாம்பழங்களைப் பார்க்க முடிகிறது. அதுவும் மிகக்குறைந்த அளவிலேயே பழக்கடைகளில் மாம்பழங்களைக் காண முடிகிறது.

தோப்புகளில் இருந்து நேரடியாக விற்பனைக்கு வரும் மாம்பழங்களை ஏப்ரல், மே மாதங்களில் சாலை யோரங்களிலும், நகரின் முக்கிய சந்திப்புகளிலும் வியாபாரிகள் குவித்து வைத்திருப்பதை பார்க்க முடியும். ஆனால், இந்த ஆண்டு அத்தகைய நிலை இல்லை.

ஆந்திர மாநிலத்தில் இருந்து வரும் பங்கணப்பள்ளி மாம்பழம் கடலூரில் கிலோ ரூ. 40க்குக் கிடைக்கிறது. செந்தூரன், ஒட்டு, ஆகிய ரகங்களும் கிலோ ரூ. 40க்கு விற்பனை செய்யப் படுகிறது. அல்ஃபோன்ஸô கிலோ ரூ. 80க்கும், காதர் கிலோ ரூ. 60க்கும், பீதர் கிலோ ரூ. 50க்கும் விற்கப்படுகிறது.

தமிழகத்தில் இந்த ஆண்டு மாம்பழங்கள் காய்ப்பு மிகவும் குறைவு என்று கூறப்படுகிறது. தமிழகத்தில் மாம்பழங்கள் அதிகமாகக் கிடைக்கும் சேலம் மாவட்டத்தில் இருந்து இன்னமும் மாம்பழங்கள் விற்பனைக்கு வரவில்லை என்று வியாபாரிகள் தெரிவிக்கிறார்கள். திருச்சி, மதுரை, ஆந்திரா போன்ற இடங்களில் இருந்துதான் மாம்பழங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. தற்போது சந்தைக்கு வந்து இருக்கும் மாம்பழங்கள்கூட உரிய சுவை இல்லை என்று தெரிவிக்கிறார்கள். இதனால் விலை இயல்பாக இருந்த போதிலும், மாம்பழங்களை அதிகளவில் விரும்பி மக்கள் வாங்க வில்லை என்று பழ வியாபாரிகள் தெரிவிக்கிறார்கள்.

இதுகுறித்து கடலூர் பழவிற்பனையாளர் ஏ.ஜி.ராஜேந்திரன் கூறுகையில், இந்த ஆண்டு 2 மாதம் தாமதமாக மாம்பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. எனினும் அதிக அளவில் வரவில்லை. சேலத்தில் இருந்து இன்னமும் மாம்பழங்கள் பிற மாவட்டங்களுக்கு விற்பனைக்கு வரவில்லை.

இந்த ஆண்டு சந்தைக்கு வந்துள்ள மாம்பழங்களில் சுவை திருப்திகரமாக இல்லை. இதனால் மக்கள் மாம்பழங்களை விரும்பி வாங்க வில்லை.

திருச்சி, மதுரை, ஆந்திரா ஆகிய இடங்களில் இருந்து மாம்பழங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. கடலூர் மற்றும் சுற்று வட்டாரங்களிலும் போதிய மாம்பழங்கள் வரவில்லை. இன்னும் ஒரு மாதத்தில் மாம்பழ சீசன் முடிந்து விடும் நிலையில் உள்ளது என்றார்.

**பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்: எம்.எல்.ஏ.க்கள் கோரிக்கை**

First Published : 05 May 2010 04:19:11 AM IST



சென்னை, மே 4: பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்று அதிமுக, காங்கிரஸ், பாமக, மார்க்சிஸ்ட் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

சட்டப் பேரவையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது இது குறித்து அவர்கள் பேசியது:

**பி. பலராமன் (அதிமுக):** அதிமுக ஆட்சியில் சென்னையில் தினமும் 11 லட்சம் லிட்டர் ஆவின் பால் விற்பனை செய்யப்பட்டது. இப்போது அது 10 லட்சம் லிட்டராக குறைந்துள்ளது. தமிழகம் முழுவதும் ஆவின் பால் விற்பனை அளவு குறைந்துள்ளது. அதனால் ஆவின் நிறுவனத்துக்கு நஷ்டம் அதிகரித்துள்ளது.

**பால்வளத் துறை அமைச்சர் உ. மதிவாணன்:** 2006 அதிமுக ஆட்சியில் ஆவின் நிறுவனம் ரூ. 336 கோடி நஷ்டத்தில் இயங்கியது. இப்போது நஷ்டம் ரூ. 290 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. அதிமுக ஆட்சியில் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 51 கோடி. ஆனால், இப்போது ரூ. 19 கோடி மட்டுமே நிலுவையில் உள்ளது. சென்னையில் தினமும் 10.38 லட்சம் லிட்டர் ஆவின் பால் விற்பனை செய்யப்படுகிறது.

**பி. பலராமன் (அதிமுக):** அதிமுக ஆட்சியின்போது பால் உற்பத்தியில் 2-வது இடத்தில் இருந்த தமிழகம் இப்போது 13-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. 13-வது இடத்தில் இருந்த கர்நாடகம் 2-வது இடத்தில் உள்ளது. பால் உற்பத்தியாளர் சங்கங்களின் எண்ணிக்கையும், உறுப்பினர்கள் எண்ணிக்கையும் அதிமுக ஆட்சியில் இருந்ததைவிட குறைந்துள்ளது.

**அமைச்சர் உ. மதிவாணன்:** தமிழகத்தில் இப்போது 8,246 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும், 22 லட்சத்து 29 ஆயிரம் உறுப்பினர்களும் உள்ளனர்.

**பி. பலராமன் (அதிமுக):** தமிழகத்தில் ஆவின் பாலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆனால் கேரளத்துக்கு பால் அனுப்பப்படுகிறது. பால் உற்பத்தியும் குறைந்துள்ளது. பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி வரும் 17-ம் தேதி போராட்டம் நடைபெற உள்ளது. இந்த ஆட்சியில் கால்நடைகளும் வீதிக்கு வந்து போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்.

**அமைச்சர் உ. மதிவாணன்:** திமுக ஆட்சியில் மட்டுமல்ல அதிமுக ஆட்சியிலும் கேரளத்துக்கு பால் அனுப்பப்பட்டது. நஷ்டத்தில் இயங்கிய பால் கூட்டுறவு சங்கங்கள் ஒப்பந்தம் செய்து கேரளத்துக்கு பால் அனுப்பி வருகின்றன. கடந்த 4 ஆண்டுகால திமுக ஆட்சியில் 3 முறை பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

பசும்பால் லிட்டருக்கு ரூ. 5.50, எருமைப் பால் லிட்டருக்கு ரூ. 10.50 உயர்த்தப்பட்டுள்ளது. பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி போராட்டம் நடத்துபவர்கள் பாலை சாலையில் ஊற்றுகிறார்கள். அபிஷேகத்துக்கு பயன்படுத்தப்படும் பாலை சாலையில் ஊற்றுபவர்கள் பால் உற்பத்தியாளராக இருக்க மாட்டார்கள்.

**எஸ். ஜெயபால் (காங்கிரஸ்):** பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும். பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடத்த வேண்டும்.

பழனிச்சாமி (காங்கிரஸ்): மாடுகளுக்கு தீவனமாக பயன்படும் வைக்கோல், சோளத்தட்டை, புண்ணாக்கு, தவிடு, கலப்புத் தீவனங்கள் ஆகியவற்றின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது. எனவே பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ. 5 உயர்த்த வேண்டும். சென்னையில் ஆவின் பால் கிடைப்பதில்லை என்று கூறப்படுகிறது. சென்னையில் அனைத்து இடங்களிலும் தேவையான அளவு ஆவின் பால் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனெனில் ஆவின் பால் மட்டுமே தரமானது. தனியார் நிறுவனங்கள் விற்கும் பாலில், தாவரக் கொழுப்புகளும், விலங்குகளின் கொழுப்புகளும் கலப்பதாகக் கூறப்படுகிறது.

எனவே, தனியார் நிறுவனங்கள் விற்கும் பாலை சோதனை செய்ய வேண்டும். அழிந்து வரும் காங்கேயம் இன மாடுகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செந்தில் பாலாஜி (அதிமுக), லீமா ரோஸ் (மார்க்சிஸ்ட்), ராமச்சந்திரன் (சுயேட்சை) ஆகியோரும் பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

**மும்முரமான விற்பனையில் பனை ஓலை விசிறிகள்**

First Published : 05 May 2010 03:56:22 AM IST



திருத்தணி பஸ் நிலையத்தில் விற்பனை செய்யப்படும் பனை ஓலை விசிறிகள்.

திருத்தணி, மே 4: அக்னி வெயிலை கட்டுப்படுத்தி குளிர் காற்று தரும் பனை ஓலை விசிறிகள் தயாரிக்கும் பணியில் ஒரு கிராமமே ஈடுபட்டுள்ளது.

சில மாதங்களாகவே நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. காலை 8 முதல் மாலை 5.30 மணி வரை வெயிலின் தாக்கம் அதிகமாக அனல் காற்றுடன் வீசுகிறது. மேலும் வீட்டில் மின் விசிறிகளில் இருந்து வரும் காற்றும் அனல் காற்றுடன் வீசுவதால் குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை நிம்மதியாக தூங்க முடியாமல் கடும் அவதிப்பட்டு வருகின்றனர்.

இரவு நேரங்களில் ஏற்படும் மின்தடையால் உறங்க முடியாமல், புழுக்கம் அதிக அளவு ஏற்படுவதால் பொதுமக்கள் நள்ளிரவில் தூங்க முடியாமல் கடும் அவதிப்படுகின்றனர்.

மேலும் புழுக்கத்திலிருந்தும், அனல் காற்றிலிருந்தும் பொதுமக்கள் தப்பிக்க பனை ஓலை விசிறிகளை தேடி வாங்கி உபயோகிக்கின்றனர். பனை ஓலை விசிறி தயாரிக்கும் பணியில் ஒரு கிராமமே ஈடுபட்டு வருகின்றது. திருத்தணியை அடுத்த கே.ஜி. கண்டிகை அருகே உள்ளது சிறுகுமி கிராமம்.

இக்கிராமத்தில் 400 குடும்பங்கள் உள்ளன. இதில் 300-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் பனை ஓலை விசிறி தயாரிக்கும் பணியில் மூன்று மாதங்களாக ஈடுபட்டு வருகின்றனர். இங்கு தயாரிக்கப்படும் விசிறிகள் திருவள்ளூர், சென்னை, வேலூர், வாலாஜா, ஆற்காடு, ஆரணி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் சில்லரை விற்பனையாகவும், மொத்த விற்பனையாகவும் செய்து வருகின்றனர்.

ஒரு விசிறி தயாரிக்க ரூ.2 முதல் ரூ.3 வரை செலவாகிறது. சென்ற ஆண்டு ஒரு விசிறியின் விலை ரூ.3 முதல் ரூ.5 வரை விற்பனை செய்துள்ளோம். ஆனால் இந்க ஆண்டு ஒரு விசிறியை ரூ.5 முதல் ரூ.10 வரை விற்பனை செய்கின்றோம். சென்ற ஆண்டை காட்டிலும் சற்று விற்பனை அதிகரித்துள்ளது.

இது குறித்து விசிறி தயாரிக்கும் தொழிலாளி தியாகராஜன் கூறுகையில், "தற்போது கோடைக் காலம் என்பதால் பனை ஓலை விசிறி தயாரிக்கும் பணியில் குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோம். இந்த சீசன் 4 மாதம் மட்டும். ஒரு பனை ஓலையை ரூ.1-க்கு வாங்கி வந்து விசிறி தயாரித்து அதற்கு வண்ணம் பூசி காயவைத்து பிறகு விற்பனைக்கு எடுத்து செல்கிறோம்.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு வெயிலின் தாக்கம் அதிகரித்து உள்ளதால் பனை ஓலை விசிறி வியாபாரம் சூடுபிடித்துள்ளது' என்றார்.

அதே கிராமத்தைச் சேர்ந்த தேசம்மாள் கூறுகையில், "எங்கள் குடும்பத்தில் உள்ள அனைரும் கடந்த ஜனவரி மாதம் முதல் விசிறி தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். எங்களுக்கு இந்த தொழிலைவிட்டால் வேறு எந்த ஒரு வேலைக்கும் செல்வதில்லை. ஒரு நாளைக்கு 30 முதல் 50 விசிறிகள் வரை நாங்கள் செய்கின்றோம். தற்போது அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் பொதுமக்களும் பனை ஓலை விசிறிகளை அதிக அளவில் வாங்கி உபயோகிக்கின்றனர். காலம் செல்ல செல்ல அதிநவீன வளர்ச்சியானாலும், தற்போது ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. என்னதான் புதிது புதிதாக பேன், ஏர்கூலர், ஏசி என வந்தாலும் பனை ஓலை விசிறியை மக்கள் மறப்பதில்லை. பனை ஓலை விசிறியிலிருந்து ஜில்லுன்னு வரும் காற்று உடல் நலத்துக்கு ஏற்றது என மக்கள் மத்தியில் கூறப்படுகிறது என்றார் அவர்.

திருத்தணி பஸ் நிலையத்தில் விற்பனை செய்யப்படும்
பனை ஓலை விசிறிகள்.

தினமலர்

**பருத்தி வயல்வெளிப்பள்ளி: விவசாயிகளுக்கு பயிற்சி**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி அடுத்த சர்க்கார் புரவிபாளையத்தில் பருத்தி சாகுபடியை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு வயல்வெளிப்பள்ளி நடந்தது. வடக்கிபாளையம் ஊராட்சி தலைவர் மாணிக்கம் தலைமை வகித்தார். தனியார் ஸ்பின்னிங் மில் முதன்மை மேலாளர் ரத்தினவேல், புரவி உழவர் மன்ற தலைவர் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். பொள்ளாச்சி வடக்கு ஒன்றிய வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன் பேசியதாவது: வடக்கு ஒன்றியத்தில் பருத்தி சாகுபடி பரப்பு அதிகளவில் இருந்தது. பல்வேறு காரணங்களால் பருத்தி சாகுபடி பரப்பு குறைந்துள்ளது. கடந்த ஆண்டு மூவாயிரம் ஹெக் டரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டிருந்தது. தற்போது மழை பெய்து பருத்தி சாகுபடிக்கு இதமான சூழல் நிலவுவதால், சாகுபடி பரப்பு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், குறைந்த செலவில் அதிக உற்பத்தி செய்ய விவசாயிகள் திட்டமிட வேண்டும். பருத்தி விதை நேர்த் திக்கு நுண்ணூட்டச்சத்துகளை பயன்படுத்த வேண் டும். அதிக மகசூல் கொடுக்கக்கூடிய பருத்தி ரகத்தை தேர்வு செய்ய வேண்டும். பருத்தியில் தற்போது மாவுப்பூச்சி தாக்குதல் அதிகம் உள்ளதால், வேளாண் துறை பரிந்துரைப்படி பூச்சி மருத் துகளை பயன்படுத்தி தாக் குதலை தடுக்க வேண்டும். மழை பெய்துள்ளதால் சித்திரை மற்றும் வைகாசி பட்டத்தில் பருத்தி சாகுபடி செய்தால் அதிக மகசூல் கிடைக்கும். இவ்வாறு, வேளாண்மை அலுவலர் பேசினார். உதவி வேளாண்மை அலுவலர் செந்தூர்குமரன், வேளாண் துறை அதிகாரிகளும், விவசாயிகளும் வயல்வெளிப்பள்ளியில் பங்கேற்றனர்.

**நெகமம் கொப்பரை ஒரு கிலோ ரூ. 31.75**

பொள்ளாச்சி: நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 31.75 ரூபாய் விலை கிடைத்தது. நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 18 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 128 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். மொத்தம் நான்கு வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட செயலாளர் ரங்கராஜன் தலைமையில் கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 36 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 30.10 ரூபாய் முதல், அதிகபட்சம் 31.75 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 92 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 24.25 ரூபாய் முதல், அதிகபட்சம் 29.75 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறுகையில், 'தேங்காய் வரத்து அதிகமாக உள்ளதால், கொப்பரை உற்பத்தியும் அதிகமாக உள்ளது. கடந்த இரண்டு வாரத்துடன் ஒப்பிடும் போது கிலோவுக்கு 50 பைசா விலை அதிகமாக கிடைத்துள்ளது. கடந்த வாரத்தை விட கிலோவுக்கு 15 பைசா விலை அதிகமாக கிடைத்துள்ளது. அதேபோன்று கடந்த வாரம் கொப்பரை வரத்து 80 மூட்டையாக இருந்தது. இந்த வாரம் வரத்தும் 48 மூட்டை அதிகரித்துள்ளது' என்றனர்.

**கோடை மழையால் மரவள்ளி கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சி**

சிறுபாக்கம்: சிறுபாக்கம், வேப்பூர் பகுதி விவசாயிகள் கோடை மழையால் மகிழ்ச்சியடைந்தனர். சிறுபாக்கம், வேப்பூர் பகுதிகளிலுள்ள நீர்ப்பாசன விவசாயிகள் தங்களின் விவசாய நிலங்களில் நிலத்தடி நீரை கொண்டு மரவள்ளி, கரும்பு பயிர் களை கடந்த ஜனவரி மாதம் முதல் விளைவித்தனர். கடந்த சில மாதங்களாகவே கோடை வெயில் சுட்டெரித்ததால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தது. இதனால் விளைவித்த பயிர்களை காப்பாற்ற முடியாமலும், நீர் தட்டுப்பாட்டினாலும் பயிர்கள் வாடின. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன் பெய்த கோடை மழை யால் மரவள்ளி, கரும்பு பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**விவசாயிகளுக்கு கல்விச்சுற்றுலா**

மதுரை: மத்திய அரசின் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம் மூலம் ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகள் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.இந்த ஆண்டும் மதுரை மாவட்டத்தில் 200 விவசாயிகளுக்கு வெளிமாநில கல்விச்சுற்றுலாவும், ஆயிரம் விவசாயிகளுக்கு வெளிமாவட்ட சுற்றுலாவும் மேற்கொள்ள 20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற மாநிலம், மாவட்டங்களில் உள்ள தோட்டக்கலை முக்கியத்துவம் பெற்ற ஆராய்ச்சி நிலையங்கள், பல்கலை மையங்களுக்கு நேரடியாக சென்று 'காண்பதன் மூலம் கற்றல்' என்ற அடிப்படையில் புதிய தொழில்நுட்பங்கள் கற்பிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு விவசாயிகள் கேரள மாநிலம் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இவர்களை ஐந்து பஸ்களில், கலெக்டர் சி.காமராஜ் கொடியசைத்து அனுப்பினார். இந்நிகழ்ச்சியில், துணைஇயக்குனர் எஸ். கிருஷ்ணசாமி, உதவி இயக்குனர் ஜி.பூபதி, தோட்டக்கலை அலுவலர் பாண்டி, மக்கள் தொடர்பு அலுவலர் சரவணன் கலந்து கொண்டனர். உடுமலையில் திசுவாழை உற்பத்தி முறை, சொட்டுநீர் பாசன முறை, மா சாகுபடியில் நெருக்கு நடவு முறையை அறிவர்.திருச்சூரில் கேரள வேளாண்மை பல்கலையில் ஆர்கிட் வகை மலர் சாகுபடி, கொக்கோ சாகுபடி, கொச்சியில் வாசனை திரவிய பயிர்களுக்கான திட்டங்கள், கொல்லம் அருகில் காயங்குளத்தில் மலைத் தோட்ட பயிர் ஆராய்ச்சி நிலையம், திருவனந்தபுரத்தில் மத்திய கிழங்கு ஆராய்ச்சி மையம், மூலிகை தோட்டம், கன்னியாகுமரியில் பருவம் இல்லாத பருவத்தில் மா சாகுபடி குறித்தும் அறிய உள்ளனர்.

---

**கரும்பில் உயர் விளைச்சலுக்கு இணை வரிசை நடவு முறை**

மதுரை: "கரும்பில் விளைச்சலை அதிகரிக்க, இணை வரிசை நடவுமுறையே சிறந்தது," என, மதுரை நீர்மேலாண்மை பயிற்சி நிலைய துணை இயக்குனர் காதிரி தெரிவித்துள்ளார்.அவர் கூறியதாவது :கரும்பு நடவு செய்யும் போது, இரண்டரைக்கு மூன்று அடி இடைவெளி அமைக்கப்படுகிறது. இந்த இடைவெளியில் சொட்டுநீர்ப் பாசனம் செய்யும் போது, ஒவ்வொரு வரிசைக்கும் பைப் அமைக்க அதிக செலவாகும். கரும்பு எண்ணிக்கை குறையாமல், இணை வரிசை நடவு முறையில் கரும்பு பயிரிடலாம். மகசூல் இழப்பு ஏற்படாமலும், சொட்டு நீர்ப்பாசன செலவையும் குறைக்கலாம். களைகள் வளர்வது தடுக்கப்படும். அகன்ற இடைவெளியில் இயந்திரக் கலப்பை கொண்டு இடையூறு இல்லாமல் இடை உழவு செய்யலாம் என்றார்.

**மாம்பழ வரத்து குறைவு**

மதுரை: மாம்பழ சீசனாக இருந்தாலும், விளைச்சல் குறைவாக இருப்பதால், உயர் ரக மாம்பழங்களின் வரத்தும் குறைவாகவே உள்ளது. மே மாதத்தில் மாம்பழங்கள் இயல்பாக பழுத்து விற்பனைக்கு தயாராக இருக்கும். ஆண்டில் ஐந்து மாதங்கள் மாம்பழங்கள் கிடைக்கும். தற்போது காய் சீசனே இரண்டு மாதத்தில் முடிந்து விட்டது. விளைச்சல் குறைந்து விட்டதால் இமாம்பசந்த், பாலாமணி, காலாபாரி ரகங்கள் வரத்து குறைந்துள்ளது. வரும் வாரங்களில் இவற்றின் விலை தொடர்ந்து அதிகரிக்கும் வாய்ப்புள்ளது என்கிறார் யானைக்கல் பழவியாபாரி செந்தில்.சீனஆப்பிள் ஒரு கிலோ 110 க்கும், வாஷிங்டன் ஆப்பிள் 140 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. பன்னீர் திராட்டை கிலோ 40 ரூபாய், நாக்பூர் ஆரஞ்ச் 80, காபூல் மாதுளை 170, விதையில்லா மாதுளை 110, சப்போட்டா 20, அன்னாசி 30 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மாம்பழங்களில் இமாம் பசந்த் ரகம் 80, சப்பட்டா 60, பாலாமணி, காதர், காலாபாரி ரகங்கள் ஒரு கிலோ 50 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

**வரத்து அதிகரிப்பால் சீரான எண்ணெய் விலை**

மதுரை: எண்ணெய் வரத்து அதிகரிப்பால், கடந்த சில மாதங்களாக விலையில் எந்த மாற்றமும் இல்லாமல் ஒரே சீராக இருக்கிறது. எண்ணெய் விலை விவரம் : பாமாயில் கடந்தவாரம் 15 கிலோ டின் 635ரூபாய். ரைஸ் பிரான் ஆயில் 635ரூபாய். கடலை எண்ணெய் 1040ரூபாய். சூரியகாந்தி எண்ணெய் 780ரூபாய். தேங்காய் எண்ணெய் 950ரூபாய். வனஸ்பதி 700ரூபாய். நல்லெண்ணெய் சாதா ரகம் 1250, தும்பை எண்ணெய் 15 கிலோ டின் 1700ரூபாய்.மலேசியா, இந்தோனேசியாவிலிருந்து கட்டுப்பாட்டில்லாமல் பாமாயில் கிடைக்கிறது. கடலை எண்ணெய் தற்போதே அதிக விலைக்கு தான் விற்கப்படுகிறது. அர்ஜென்டினா, பிரேசிலில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட, சுத்திகரிக்கப்படாத சூரியகாந்தி எண்ணெய் வரத்து அதிகமாக இருக்கிறது.புதுஎள் ரகமும் அதிகமாக கிடைப்பதால் இதர எண்ணெய் விலையும் கட்டுக்குள் உள்ளதுஎன்கிறார், மதுரை எண்ணெய் மற்றும் எண்ணெய் வித்துக்கள்வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி.

**உளுந்து, பாசிப்பயறு விலை உயர்வு**

மதுரை: உளுந்து மற்றும் பாசிப்பயறு விலை 100 கிலோ மூடைக்கு, 300 ரூபாய் வரை கூடியுள்ளது.பருப்பு தயாரிப்பு மற்றும் விற்பனையாளர்கள் சங்கசெயலாளர் வெற்றிச்செல்வன் கூறுகையில், "தஞ்சைப் பகுதியில் பாசிப்பயறு, உளுந்து பயறுகளின் வரத்து நின்றுவிட்டது. தொடர்ந்து வரத்து இருந்தால் தான் விலை சீராக இருக்கும். விளைச்சல் குறைந்ததால், விலை அதிகரித்துள்ளது. தொடர்ந்து விலை உயரவும் வாய்ப்புள்ளது, என்றார்.கடந்தவாரம் 4900 ரூபாய்க்கு விற்கப்பட்ட 100 கிலோ துவரை, நேற்று 4750 ரூபாயாக குறைந்தது. துவரம்பருப்பு விலையில் (6800 ரூபாய்) மாற்றமில்லை. உளுந்து பயறு 5100 லிருந்து 5400 ஆக உயர்ந்துள்ளது. உளுந்தம்பருப்பு 6800 லிருந்து 7000

ரூபாய்க்கு விற்கப்பட்டது. பாசிப்பயறு மூடைக்கு 100 ரூபாய் அதிகரித்து 7000 ரூபாய்க்கும், பட்டாணிபயறு 1500 ரூபாய்க்கும், பட்டாணி பருப்பு 1700 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. கொண்டைக்கடலை, கடலைபருப்பு மூடை 50 ரூபாய் குறைந்து 2150, 2650 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

**கலப்பட எண்ணெய் விற்பனை: கடைகளில் சுகாதாரத்துறை ஆய்வு**

நாமக்கல்: மளிகை கடைகளில் விற்பனை செய்யப்படும் உணவு எண்ணெயில் கலப்படம் செய்வதாக வந்த புகாரை அடுத்து, சுகாதார ஆய்வாளர்கள் நாமக்கல் பகுதியில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். மளிகை கடைகளில் கடலை எண்ணெய்யில் கலப்படம் செய்து விற்பனை செய்வதாக, மாவட்ட சுகாதாரப்பணிகள் துணை இயக்குனர் சேகர் மற்றும் நகராட்சி கமிஷனர் ஆறுமுகம் ஆகியோருக்கு தகவல் வந்தது. அவர்கள் உத்தரவின்பேரில், சுகாதார அலுவலர் முகமது மூசா, உணவு ஆய்வாளர் சிவசண்முகம், தொழில் நுட்ப நேர்முக உதவியாளர் கல்யாணசுந்தரம், சுகாதார ஆய்வாளர்கள் பாலசுவாமிநாதன், ராஜகணபதி ஆகியோர் நகராட்சி பகுதியில் உள்ள மளிகை மற்றும் சூப்பர் மார்க்கெட் கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

கடைகளில் விற்பனை செய்யப்படும் உணவு எண்ணெய்களை சேகரித்து ஆய்வுக்காக அனுப்பினர். மேலும், தயாரிப்பு மற்றும் காலாவதி தேதி இல்லாத, பேட்ஜ் எண் குறிப்பிடப்படாத உணவு பொருட்கள், சோப்பு, வாசிங் பவுடர் உள்பட 11 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை பறிமுதல் செய்தனர்.ஆய்வுகள் தொடர்ந்து நடக்கும். காலாவதி தேதி அச்சிடப்படாத பொருட்களை விற்பனை செய்தால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என, அதிகாரிகள் எச்சரித்தனர்.

**பயறு விதைப்புக்கு ஏற்ற பருவம்: உதவி இயக்குனர் யோசனை**

நாமக்கல்: 'நாமக்கல் வட்டாரத்தில் பரவலாக மழை பெய்துள்ளதால், இது பயறு வகை விதைப்புக்கு ஏற்ற தருணம்' என, நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் பேபிகலா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வட்டாரத்தில் பரவலாக மழை பெய்துள்ளதால், பயறு வகை விதைப்புக்கு ஏற்ற தருணம். விவசாயிகள் தொழில் நுட்பங்களை கடைபிடித்து பயறு வகைகளை சாகுபடி செய்யலாம்.நிலத்தை இரண்டுமுறை உழவு செய்ய வேண்டும். அடியுரமாக ஐந்து மெட்ரிக் டன் தொழு உரம், 50 கிலோ சூப்பர் பாஸ்பேட், 50 கிலோ ஜிப்சம் இட்டு விதைப்புக்கு வயலை தயார் செய்ய வேண்டும்.

விதை முளைக்கும் அளவுக்கு ஈரம் இருக்கும் போது விதைப்பு மேற்கொள்ளவும். ஒரு ஏக்கருக்கு 8 கிலோ பாசிப்பயறு விதை விதைத்து, ஒரு சதுர மீட்டருக்கு 33 ö சடிகள் இருக்குமாறு பராமரிப்பு செய்ய வேண்டும். ஏக்கருக்கு 2 கிலோ நுண்ணூட்டச்சத்தை விதைப்பு செய்த பின் மேலாக மணலுடன் கலந்து தூவவேண்டும். விதைப்பு செய்து முதல் களை எடுப்பு முடித்து 10 கிலோ யூரியாவை நிலத்தில் ஈரம் இருக்கும் போது சீராக இடவேண்டும். மேலும் விவரங்களுக்கு வேளாண் விரிவாக்க அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இயற்கை தேயிலைக்கு என்றுமே 'மவுசு' உபாசி கருத்தரங்கில் நிதர்சன தகவல்: தென்னிந்திய அதிபர்கள் பங்கேற்பு**

குன்னூர்: 'இயற்கை முறையில் தயாரிக்கப்படும் தேயிலைக்கு உலகளவில் கிராக்கி அதிகரித்துள்ளது; உற்பத்தி செலவும் குறைவு,' என தேயிலை கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

தேயிலை சாகுபடியில் ரசாயன உர பயன்பாடு அதிகரித்து வருகிறது. உலகளவில், குறிப்பாக ஜெர்மனி, பிரான்சு உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் இயற்கை முறையில் தயாரிக்கப்படும் தேயிலை தூளுக்கு கிராக்கி அதிகம். இதனால், நீலகிரி உட்பட தென் இந்தியாவில் இயற்கை முறை தேயிலை உற்பத்தியை அதிகப்படுத்த தேயிலை வாரியம்

முனைப்பு காட்டியுள்ளது. குன்னூர் தேயிலை வாரியம், உபாசி தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் இயற்கை தேயிலை தயாரிப்பு குறித்த முதற்கட்ட கூட்ட ஆலோசனை கூட்டம் குன்னூர் உபாசி அரங்கில் நடத்தப்பட்டது.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற குன்னூர் தேயிலை வாரிய செயல் இயக்குனர் நசீம் பேசியதாவது; ரசாயன உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்தாமல், இயற்கை உரம் மூலம் தயாரிக்கப்படும் தேயிலை தூளுக்கு உலகளவில் கிராக்கி அதிகரித்து வருகிறது. தேயிலை செடி பயிரிடப்பட்டு, தொடர்ந்து மூன்று ஆண்டுகள் இயற்கை உரத்தை மட்டுமே பயன்படுத்தி தேயிலை சாகுபடி செய்யும் தொழிற்சாலைகள், அவற்றை கொண்டு தேயிலை தூள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இயற்கை தேயிலை தூள் தயாரிக்கும் நிறுவனங்களாக அங்கீகாரம் வழங்கப்பட்டு, அதற்குரிய சான்றிதழ் வழங்கப்படுகிறது. இயற்கை முறையில் தேயிலை சாகுபடி செய்யும் கம்பெனி எஸ்டேட்டுகள், சிறு விவசாயிகள், தேயிலை தூள் உற்பத்தி செய்யும் சிறிய, பெரிய தொழிற்சாலைகளுக்கு தேயிலை வாரியம் மானிய உதவி செய்கிறது.

தென்னிந்தியாவில் மொத்தம் 280 ஏக்கர் பரப்பளவில் இயற்கை முறையிலான தேயிலை சாகுபடியை மேற்கொள்ளும் புதிய திட்டத்தை தேயிலை வாரியம் மேற்கொண்டுள்ளது; டாடா நிறுவனம் மூலம் இப்பணி நடக்கவுள்ளது. நீலகிரியில், பழனியப்பா தேயிலை தோட்டத்தில், 20 ஹெக்டர் பரப்பளவில் இயற்கை முறையிலான தேயிலை சாகுபடி மேற்கொள்ள தேயிலை வாரியம் ஊக்குவிப்பு வழங்கியுள்ளது. இயற்கை முறையில் தேயிலை சாகுபடி செய்வதற்கு அதிக செலவு பிடிக்கும் என்ற கருத்து உள்ளது. பசுவின் சாணம், இலை, தழைகளை உரமாக பயன்படுத்தி தேயிலை சாகுபடி மேற்கொள்ள முடியும் என ஆய்வில் தெரியவந்துள்ளது. குறைந்த செலவில் இயற்கை முறையிலான தேயிலை சாகுபடியை மேற்கொள்ள முடியும். மற்ற தேயிலை தூளை விட இயற்கை முறை தேயிலை தூளுக்கு 20 சதவீதம் கூடுதல் விலை கிடைக்கிறது. இத்திட்டம் முழு வெற்றி பெற தனிப்பட்ட விவசாயி முன்வந்தால் மட்டும் போதாது. பல விவசாயிகளை ஒருங்கிணைத்து செயல்படும் சிறு விவசாய சங்கங்கள், விவசாய குழுக்கள் ஒன்றிணைந்து தங்கள் தோட்டங்களில் இயற்கை முறையிலான தேயிலை சாகுபடியை மேற்கொள்ள வேண்டும்.

தென்னிந்தியாவில் 3,000 எக்டர் பரப்பளவில் மட்டுமே இயற்கை முறை தேயிலை சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது; மொத்த தேயிலை உற்பத்தியில் இது 3 சதவீதம்; இதை 10 சதவீதமாக அதிகரிக்க திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு, நசீம் பேசினார். தேயிலை ஆராய்ச்சி மைய முதன்மை ஆலோசகர் டாக்டர். முரளிதரன் பேசுகையில்,"தேயிலை தோட்டங்களில் ரசாயன உரங்களின் பயன்பாடு ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கிறது. ரசாயன உர பயன்பாட்டால் மண் வளம் வெகுவாக பாதிக்கப்படுகிறது; மண்ணில் உள்ள சத்து குறைவதால், ஆண்டு தோறும் ஒரே அளவு தேயிலை சாகுபடியை பெற, ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக ரசாயன உரங்களை பயன்படுத்த வேண்டிய நிலையுள்ளது," என்றார். நீலகிரி சிறு தேயிலை விவசாயிகள் சங்க தலைவர் ரங்கையா, உபாசி செயலர் உல்லாஷ் மேனன் உட்பட பலர் பேசினர்.

**நெல், அரிசி வாங்குபவர்கள் கவனத்திற்கு...**

புதுக்கோட்டை: நெல் அல்லது அரிசி வாங்கும் தனியார் நிறுவனம் மற்றும் தனியார் ஆகியோர் அரசுக்கு சமர்ப்பிக்கும் அறிக்கை படிவங்கள் மத்திய உணவுத்துறை அல்லது மாநில உணவு வழங்கல் துறை வெப்சைட்டில் உள்ளதாக கலெக்டர் சுகந்தி தெரிவித்துள்ளார்.
புதுகை மாவட்டத்தில் எந்த ஒரு நிறுமம், நிறுவனம், தனியார் நெல் அல்லது அரிசியை 10ஆயிரம் மெ.டன்னுக்கு

அதிகமாக கரீப்பருவம் 2009-10ல் அதிகமாக இருக்கும் பட்சத்தில் வாங்கப்பட்ட விவர அறிக்கையை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து மத்திய அரசு நிர்ணயித்துள்ள கால இடைவெளிக்குள் அரசு முதன்மை செயலாளர், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும்.25ஆயிரம் மெ.டன்னுக்கு அதிகமாக நெல் அல்லது அரிசி வாங்கும் பட்சத்தில் வாங்கப்பட்ட விபர அறிக்கையை உரிய படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட கால இடைவெளிக்குள் பூர்த்தி செய்து அரசு சார்பு செயலாளர், உணவு மற்றும் பொதுவிநியோக திட்டத்துறை, அறை எண் 288ஏ, கிரிஷ்பவன், புது டில்லி-110001 என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும்.இதற்கான படிவங்கள் மத்திய உணவுத்துறை அல்லது மாநில உணவு வழங்கல் துறை வெப்சைட்டில் உள்ளது.

**மழையில்லாததால் விவசாயம் கடும் பாதிப்பு: வீட்டு மனைகளாக மாறும் விளை நிலம்**

மேட்டூர்: ஜலகண்டாபுரம், வனவாசி பகுதி விவசாயிகள் தங்கள் நிலங்களை ஏக்கர் கணக்கில் ரியல் எஸ்டேட் உரிமையாளர்களுக்கு விற்பதால், இதுவரை 300 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் வீட்டு மனையாக மாறியுள்ளது, பிற விவசாயிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மேட்டூர் தாலுகா, ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, வனவாசி பகுதியில் விவசாய நிலங்கள் அதிகம் உள்ளது. அப்பகுதியில் ஏரி, கால்வாய் பாசன வசதி கிடையாது. வறட்சி மிகுந்த அப்பகுதியில் கிணற்று பாசனமும் எதிர்பார்த்த அளவு கை கொடுப்பதில்லை. எனவே, மழையை நம்பியே அப்பகுதி விவசாயிகள் பயிர் சாகுபடி செய்கின்றனர். வடகிழக்கு, தென்மேற்கு பருவமழை சீசனில் விவசாயிகள் சோளம், தட்டபயிர், உளுந்து, பச்சபயிறு, எள் போன்றவற்றை சாகுபடி செய்வது வழக்கம். ஆனால், பருவமழை எதிர்பார்த்தபடி பருவமழை பெய்யாததாலும், விவசாயத்தில் போதிய வருமானம் இல்லாததால் அப்பகுதி விவசாயிகள் விரக்தியில் இருந்தனர்.

இந்நிலையில், ரியல் எஸ்டேட் உரிமையாளர்கள் அப்பகுதியில் புகுந்து விவசாயிகளிடம் லட்ச கணக்கில் பணத்தை கொடுத்து ஏக்கர் கணக்கில் நிலங்களை வாங்கி வீட்டுமனைகளாக மாற்றி விற்பனை செய்கின்றனர். வீடு கட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் வீட்டு மனைகளை பெரும்பாலோர் வாங்குவதில்லை.

பதிலாக அரசு ஊழியர்கள், தொழிலதிபர்கள் பலர் தங்கள் கணக்கில் கொண்டு வர முடியாத பணத்தை சமீபகாலமாக நிலத்தில் முதலீடு செய்ய துவங்கியுள்ளனர். அவர்கள் டோக்கன் அட்வான்ஸ் என்ற பெயரில் நில உரிமையாளருக்கு அட்வான்ஸாக சில லட்சம் பணத்தை கொடுக்கின்றனர். மீதி பணத்தை ஆறு மாதத்திற்குள் தருவதாக ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர்.

ஆறு மாதத்திற்கு முன்பாகவே ஒப்பந்தம் செய்துள்ள நிலத்தை, வேறு யாருக்கேனும் கூடுதல் விலைக்கு விற்று விடுகின்றனர். நிலம் விற்க முடியாத பட்சத்தில் மீதி பணத்தை செலுத்தி நிலத்தை வாங்கி கொள்கின்றனர். ஜலகண்டாபுரம் பகுதியில் உள்ள நரியம்பட்டி, கோட்டைமேடு, செங்குட்டை, காட்டம்பட்டி, தோரமங்கலம், சவரியூர், வனவாசி பகுதியில் 300 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலம், ஒரு ஆண்டில் வீட்டுமனையாக மாறியுள்ளது. ஆனால், வசதியானவர்கள் வியாபார நோக்கத்திற்காக நிலத்தை வாங்குவதாலும், வீடு கட்டும் நோக்கத்தில் மனை வாங்குவோர் குறைவாக இருப்பதாலும் ஜலகண்டாபுரம் பகுதியில் ரியல் எஸ்டேட் பிஸினஸ் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால், விவசாயிகளிடம் நிலத்தை வாங்கி வீட்டுமனையாக மாற்றிய ரியல் எஸ்டேட் உரிமையாளர் பலர் அதனை விற்பனை செய்ய முடியாமல் அவதிப்படுகின்றனர். எனினும், ஜலகண்டாபுரம் சுற்றுப்பகுதியில் விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாறி வருவது விவசாயத்தை ட்டுமே நம்பியுள்ள பொதுமக்களை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது. இதே நிலை நீடித்தால் நங்கவள்ளி ஒன்றியத்தில் பயிர் வகை உற்பத்தி கடுமையாக பாதிக்கும் என வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

**கள் விற்பனையை கட்டுப்படுத்த ஐ.ஜி., உத்தரவு**

ஆத்தூர்: 'கள் இறக்குதலை தடை செய்யவும், விற்பனையை முழுமையாக கட்டுப்படுத்த வேண்டும்' என, போலீஸாருக்கு கோவை ஐ.ஜி., உத்தரவிட்டுள்ளார். தமிழகத்தில் கள்ளுக்கான தடையை நீக்க வலியுறுத்தி வரும் 14ம் தேதி சென்னையில் பனை, தென்னை தொழிலாளர்கள் விவசாயிகள் நுகர்வோர் கூட்டமைப்பு, தமிழ்நாடு கள் இயக்கம் சார்பில் போராட்டம் நடக்கிறது. உலக செம்மொழி மாநாடு வளாகத்தில், 'கள்' விற்பனை செய்வதாக தமிழ்நாடு 'கள்' இயக்க ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி தெரிவித்துள்ளார். சேலம், ஈரோடு, நாமக்கல், கோவை மாவட்ட பகுதிகளில் ஒரு லட்சம் பானைகளில் 'கள்' உற்பத்தி செய்து எடுத்து வரும்படி சங்க நிர்வாகிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

செம்மொழி மாநாட்டில் அரசு தடையை மீறி கள் விற்பனை செய்வதாக தெரிவித்துள்ளதால் கள் விற்பனை கட்டுப்படுத்த அரசு அறிவுறுத்தியுள்ளது. அதன் பேரில் கோவை ஐ.ஜி., சிவனான்டி, சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் கள் விற்பனை முழுமையாக கட்டுப்படுத்தும்படி உத்தரவிட்டுள்ளார். பனை மரத்தில் பானை கட்டியிருந்தால் அகற்ற வேண்டும். அகற்றாமல் இருந்தால் விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தியுள்ளார். ஆத்தூர் போலீஸ் சப்டிவிசனுக்குட்பட்ட ஆத்தூர், தலைவாசல், வீரகனூர், கெங்கவல்லி, தம்மம்பட்டி, மல்லியக்கரை பகுதியில் கள் விற்பனை கட்டுப்படுத்த தீவிர ரோந்து பணியில் போலீஸார் ஈடுபட்டுள்ளனர். பனை மரத்தில் கள் பானைகளை அகற்றும்படி விவசாயிகளுக்கு போலீஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆத்தூர் பகுதியில் நேற்று கள் விற்பனை செய்த அம்மம்பாளையம் மணி (55), தெற்குகாடு பாண்டியன் (42), தென்னங்குடிபாளையம் முருகன் (45), ராமநாயக்கன்பாளையம் குமார் (37) ஆகிய நான்கு பேரை கைது செய்தனர். கள் விற்பனை கட்டுப்படுத்தும் வேளையில் போலீஸார் ஈடுபட்டுள்ளது தமிழ்நாடு கள் இயக்கத்தினர் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**மழை பாதித்த விவசாயிகளுக்கு ரூ.23 லட்சம் இழப்பீடு: அதிகாரி**

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தில் கடந்தாண்டு மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மழைக்காப்பீட்டு திட்டத்தில் இம்மாவட்டத்துக்கு 23 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.தஞ்சை மாவட்டத்தில் கடந்தாண்டு 418 விவசாயிகள் ஆயிரத்து 629 ஏக்கருக்கு மழை காப்பீட்டு திட்டத்தில் பங்கேற்றனர். இவர்களுக்கு 23 ல்டசம் ரூபாய் இழப்பீட்டு தொகை ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. 2008 - 09ம் ஆண்டில் 13 விவசாயிகள் மட்டும் இத்திட்டத்தில் பங்கேற்று 12 ஆயிரம் பிரிமியம் செலுத்தி, 60 ஆயிரம் வரை இழப்பீடு பெற்றனர்.

ஆனால், கடந்த 2009 - 10ம் ஆண்டில் 418 விவசாயிகள் பங்கேற்று எட்டு லட்சம் ரூபாய் பிரிமியம் செலுத்தி 23 லட்சம் ரூபாய் இழப்பீடு தொகையாக பெற உள்ளனர். ஒவ்வொரு யூனியனிலும் நிறுவப்பட்டுள்ள மழைமானியின் வாயிலாக மழை அளவு கணக்கிடப்பட்டு வருகிறது. ஆகஸ்ட் 15ம் தேதி முதல் டிசம்பர் 31ம் தேதி வரை ஒவ்வொரு யூனியனிலும் பெய்ய வேண்டிய மழை அளவை வைத்து, அதைவிட குறைவாக பெய்தாலும், செப்டம்பர் 15 முதல் ஜனவரி 31ம் தேதி வரை ஒவ்வொரு யூனியனிலும் பெய்ய வேண்டிய மழை அளவை வைத்து அதைவிட அதிகமாக பெய்தாலும் செப்டம்பர் 15 முதல் நவம்பர் 15ம் தேதி வரை தொடர்ந்து 20, 25, 30 நாட்களுக்கு மழையே இல்லாததாக இருந்தாலும் அதற்காக இழப்பீடு தொகை எனறு மூன்று கட்டமாக கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது. பிரிமியம் செலுத்திய விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை காசோலையாக விரைவில் வழங்கப்பட உள்ளது. இதுபற்றி, கூடுதல் விபரங்களை பெற மாவட்ட

பயிர் காப்பீட்டு திட்ட ஒருங்கிணைப்பாளர் பழனியப்பனை நேரில் அல்லது 9443780661 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு அறியலாம், என கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கலியபெருமாள் தெரிவித்தார்.

**மண் பரிசோதனைக்கு பிறகே ராட்டினங்கள் அமைக்க உத்தரவு**

தேனி,: வீரபாண்டியில் மண் உறுதி பரிசோதனை செய்த பிறகே ராட்டினங்கள் அமைக்க வேண்டும் என பாலகிருஷ்ணன் எஸ்.பி., உத்தரவிட்டுள்ளார். வீரபாண்டி கவுமாரியம்மன் கோயில் திருவிழா மே 11 ல் துவங்கி 18 வரை நடக்கிறது. திருவிழா காலங்களில் மிகவும் எடை கொண்ட ராட்டினங்களை இணைப்பது வழக்கம்.தற்போது மழை பெய்து தரைப்பகுதி முழுக்க சகதியாக காணப்படுகிறது.

இந்நிலையில் தரையை தோண்டி அதிக எடை கொண்ட ராட்டினங்களை அமைத்து வருகின்றனர்.இப்படி இறுக்கம் இல்லாத தரையில் ராட்டினங்கள் அமைப்பதால் விபத்து அபாயம் ஏற்பட்டு விடும் என்பதால் பாலகிருஷ்ணன் எஸ்.பி., இடத்தை பார்வையிட்டார். ராட்டினங்கள் அமையும் தரைப்பகுதி முழுவதும் பொதுப்பணித்துறை நிபுணர்களை வைத்து மண் உறுதி பரிசோதனை செய்த பிறகே ராட்டினங்கள் அமைக்க வேண்டும். அதுவரை ராட்டினங்கள் அமைக்கும் பணியினை நிறுத்தி வைக்க வேண்டும்.ராட்டினங்கள் முழுவதும் அமைத்து முடித்த பின் மீண்டும் பொதுப்பணித்துறை, தீயணைப்புத்துறை, மின்வாரியத்திடம் உறுதிச்சான்று, தடையில்லா சான்றுகள் பெற்று போலீசாரிடம் ஒப்படைத்த பின்னரே இயக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

**மரக்கன்று நடும் விழா**

திருநெல்வேலி:ஆரோக்கியநாதபுரத்தில் உழைப்பாளர் தினம் முன்னிட்டு மரக்கன்று நடும் விழா நடந்தது.அந்தோணிசாமி தலைமை வகித்தார். மகேஷ் வரவேற்றார். மயன் நிறுவன செயல் இயக்குனர் சிதம்பர கார்த்திகேயன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டார். குடும்பனார் நன்றி கூறினார்.ஏற்பாடுகளை ஆரோக்கியநாதபுரம் இளைஞர் அணியினர் செய்தனர்.

**மரம் வளர்த்தால் உப்பு படிந்த நிலத்தையும் பொன் விளையும் பூமியாக மாற்ற முடியும் : வன ஆராய்ச்சி மைய இயக்குனர் தகவல்**

திருவாரூர்: மரம் வளர்த்தால் உப்பு படிந்த நிலத்தையும் பொன்விளையும் பூமியாக மாற்ற முடியும் என்று சமூக வன ஆராய்ச்சி மைய இயக்குனர் ஜெயினுலாவுதீன் தெரிவித்தார்.திருவாரூர் மாவட்ட வனத்துறை மற்றும் வனவிரிவாக்க மைய அலுவலகத்தில் மரம் வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கான கருத்தரங்கம் நடந்தது. இதில் பங்கேற்ற வந்த சமூக வன ஆராய்ச்சி மைய இயக்குனர் ஜெயினுலாவுதீன் நிருபர்களிடம் கூறியதாவது: திருவாரூர் மாவட்டத்தில் நிறைய நிலங்கள் சாகுபடி செய்யப்படாமல் உள்ளது. இதுகுறித்து விவசாயிகளில் விசாரித்தபோது ஆள் பற்றாக்குறை என்று தெரிவித்தனர். நிலங்களை பயிரிடாமல் போடக்கூடாது. மரம் வளர்க்க வேண்டும். எந்த வகையான நிலத்தையும், உப்பு படிந்த நிலத்தையும் மரங்கள் வளர்த்து பொன் விளையும் பூமியாக மாற்ற முடியும். மரம் வளர்த்தால் ஏழைகள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் இல்லாதவர்கள் என்ற நிலையை ஏற்படுத்த முடியும். திருவாரூர் மாவட்டத்தில் 1.43 லட்சம் மரக்கன்றுகள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளன. 5 ஆயிரம் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட உள்ளது என்றார்.கருத்தரங்கில் விவசாயிகளுக்கு மரம் வளர்ப்பது குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. மாவட்ட வனவிரிவாக்க அலுவலர் செல்வம் வரவேற்றார். மாவட்ட பயிரிடுவோர் சங்க செயலாளர் தமிழ்செல்வன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் நல அமைப்பு ஆலோசனைக் கூட்டம்**

செஞ்சி: செஞ்சியில் வராக நதி, நந்தன் கால்வாய் வடிநிலப்பகுதி விவசாயிகள் நல மேம்பாட்டு அமைப்பு சார்பில் ஆலோசனை கூட்டம் நடந்தது. அமைப்பாளர் மாதவன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில தலைவர் பாலகிருஷ்ணன் சிறப் புரை நிகழ்த்தினார். தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க சிறப்பு தலைவர் வக்கீல் ராமமூர்த்தி, விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் தாண் டவராயன், செயலாளர் சுப்பிரமணியன், பொரு ளாளர் ஜெயச்சந்திரன், மா.கம்யூ., வட்ட செயலாளர் கோவிந்தசாமி பேசினர். வட்ட செயலாளர் வசுபாலன் நன்றி கூறினார். நேரடி கொள்முதல் நிலையங்களில் முறைகேடின்றி நெல் கொள்முதல் செய்ய வேண்டும். நெல் லுக்கு குவிண்டாலுக்கு 1,500 ரூபாய் வழங்க வேண்டும். செஞ்சி மார்க் கெட் கமிட்டியில் விவசாயிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரவேண் டும். மார்க்கெட் கமிட்டிக்கு வரும் அனைத்து விவசாயிகளையும் வேளாண் காப்பீட்டு திட்டத்தில் சேர்க்க வேண் டும். செஞ்சி கமிட்டியின் நிர் வாக சீர்கேடு காரணமாக விவசாயிகள் நடத் தும் மறியலின் போது போலீசார் தடியடி நடத்துவதையும், விவசாயிகளை அவமானப்படுத்துவ தையும் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றினர்.

**பருத்தி வரத்தில்லை**

திருப்பூர்: திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு பருத்தி வரத்தில்லை. விற்பனை குழு கண்காணிப்பாளர் ஆறுமுகராஜன் கூறியதாவது: திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு சோளம் 418 மூட்டை; கம்பு 54; ராகி 5; வரமிளகாய் 24 மூட்டைகள் வந்திருந்தன; சோளம் குவிண்டால் ரூ.1,300 முதல் 2,400 வரை; கம்பு 900 முதல் 1,500 வரை; ராகி 1,300 முதல் 1,500 வரை; வரமிளகாய் 500 முதல் 600 ரூபாய் வரை விற்பனையானது. 65 விவசாயிகள், 32 வியாபாரிகள் பங்கேற்றனர். பருத்தி வரத்து முற்றிலுமாக இல்லை. திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி இருப்பு வைப்பதில்லை. மேலும், திருப்பூர் பகுதியில் பருத்தி விளைச்சல் குறைந்து விட்டது; வரத்து இருந்தால் மட்டும் விற்பனைக்கு எடுத்துக் கொள்ள முடியும். அவிநாசி சொசைட்டி போல் கொள்முதல் செய்து, விற்பனை செய்யும் அதிகாரம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு இல்லை, என்றார்.

**கோடை மழையால் சின்ன வெங்காயம் சிதைந்தது: அறுவடை நேரத்தில் ஆபத்து**

உடுமலை: அறுவடை தருணத்தில் பெய்த மழையால் சின்னவெங்காயம் விளைநிலத்திலேயே அழுகி வீணாகி வருகிறது. இதனால், விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பி.ஏ.பி., மற்றும் கிணற்றுப்பாசனத்திற்கு சின்னவெங்காயம் பிப்ரவரி மாதத்தில் பயிரிடப்பட்டது. நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து மழை இல்லாமல் கடுமையான வெயில் கொளுத்தியது. இதனால், வெங்காய பயிர்களில் இலைகருகல் உட்பட பல்வேறு நோய்த்தாக்குதல் ஏற்பட்டது. வறட்சி காரணமாக பயிர்களுக்கு கூடுதலாக மருந்து மற்றும் ரத்தை விவசாயிகள் பயன்படுத்தினர். இடுபொருள் செலவு அதிகரித்த நிலையில், போதிய அளவு விளைச்சல் கிடைக்காத நிலை இருந்தது. கடந்த மாத இறுதியில் துவங்க வேண்டிய அறுவடை பணிகள் விவசாய தொழிலாளர் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டது. வேலை உறுதியளிப்பு திட்டத்திற்கு செல்ல தொழிலாளர்கள் ஆர்வம் காட்டியதால் பிற மாவட்டங்களிலிருந்து ஆட்களை அழைத்து வர விவசாயிகள் திட்டமிட்டிருந்தனர். உடுமலை பகுதியில் சில நாட்களாக கோடை மழை பெய்ய துவங்கியது. விளைநிலங்களில் தண்ணீர் தேங்கியது. சின்ன வெங்காயம் பயிரிட்ட விவசாயிகள் அதிர்ச்சிக்குள்ளானார்கள். அதிகப்படியான ஈரத்தால் அறுவடை செய்யப்படாமல் வெங்காயம் விளைநிலத்திலேயே அழுக துவங்கியுள்ளது. குறைந்த விளைச்சலால் சாகுபடியில் பல ஆயிரம் ரூபாய் நஷ்டத்தை எதிர்பார்த்திருந்த விவசாயிகளுக்கு மழையால் வெங்காயம் அழுகி வருவது வேதனையை அதிகரித்துள்ளது.

பெதப்பம்பட்டி, வெள்ளியம்பாளையம், சுங்காரமுடக்கு, புக்குளம் உட்பட பல்வேறு பகுதிகளில் பல ஏக்கர் பரப்பில் வெங்காயம் அழுகியுள்ளது. விவசாயிகள் கூறியதாவது: விதை வெங்காயம் தட்டுப்பாடு, இடுபொருள் செலவு, தொழிலாளர் தட்டுப்பாடு போன்ற பிரச்னைகளால் சாகுபடி செலவு ஏக்கருக்கு 50 ஆயிரத்தை எட்டியுள்ளது. இந்த சீசனில் மோசமான பருவநிலையால் பயிர்கள் முழுமையாக வளரவில்லை. அறுவடை தருணத்தில் மழை பெய்துள்ளதால் வெங்காயத்தை அறுவடை செய்ய முடியாமல் விளைநிலத்திலேயே அழுகியுள்ளது. ஏக்கருக்கு சராசரியாக 3 டன் வரை வெங்காயம் அழுகி வீணாகியுள்ளது. தண்ணீர் தேங்காத பகுதியில் விளைந்துள்ள வெங்காயமும் தரமில்லாமல், இருப்பு வைக்க முடியாத நிலையில் உள்ளது. கொள்முதல் விலையும் குறைந்துள்ளதால் ஏக்கருக்கு பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது', இவ்வாறு தெரிவித்தனர்.

**பி.ஏ.பி., பாசனத்தின் பகிர்மான வாய்க்கால் மாயம் : அவல நிலையை மாற்ற பாசன நிர்வாகிகள் மனு**

உடுமலை: 'பி.ஏ.பி., மண்டல பாசனத் தின் போது, பகிர்மான வாய்க் கால்கள் ஆண்டுதோறும் மண் மூடி காணாமல் போகும் அவல நிலையை மாற்ற வேண்டும்' என, பாசன சங்க நிர்வாகிகள் அரசுக்கு கோரிக்கை மனு அனுப்பி உள்ளனர்.

பி.ஏ.பி., பாசனத்தின் மூலம் குடிமங்கலம் பகுதி பயன்பெற புதுப்பாளையம் கிளை வாய்க் கால் 1964ல் 40 கி.மீ., நீளத்துக்கு கட்டப்பட்டது. ஏ.நாகூர், புதுப் பாளையம், விருகல்பட்டி, கொங்கல் நகரம், சோமவாரப் பட்டி, கொண்டம்பட்டி பாசன சங்கங்களின் கீழ் இரண்டாம் மண்டலத்தில் 7,219 ஏக்கர், நான்காம் மண்டலத்தில் 7,310 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. 30 பிரிவு வாய்க்கால் மூலம் விளை நிலங்களுக்கு தண்ணீர் பிரித் தளிக்கப்படுகிறது. வாய்க்காலில் ஓடைகள் மற்றும் வண்டித்தடங்கள் குறுக் கிடும் இடத்தில் தண்ணீர் சீராக செல்ல நான்கு 'ஸ்பைன்ஸ்'கள் உள்ளன. பக்கவாட்டு சுவர் பராமரிப்பு இல்லாமல் இருந்ததால், தண்ணீர் சேதாரம் அதிகரித்து, உடைப்பும் ஏற்பட்டு வந்தது. உலக வங்கி நிதியுதவியுடன் நீர்வள நிலவள திட்டத்தில் நான்கு கோடியே 13 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, கடந் தாண்டு பணிகள் மேற் கொள்ளப்பட்டன. இந்நிதியில் கிளை வாய்க்கால் மட்டுமே புதுப்பிக்கப்பட்டது. விளைநிலங்களுக்கு தண்ணீர் செல்லும் பெரும்பாலான பகிர்மான வாய்க்கால்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப் த்டவில்லை. மண்டல பாசனத்தின் போது, தண்ணீர் விரயம் அதிகரித்து கடைமடை பகுதிகளில் சாகுபடி பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. மண் வாய்க்கால்கள் பாசன சங்கங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

சங்கங்கள் சார்பில், விவசாயிகள் பங்களிப்பு தொகையோடு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கும் முன், பராமரிப்பு பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன. அடுத்த பாசனம் துவங்கும் போது, இந்த மண் வாய்க் கால்கள் காணாமல் போய் விடுகின்றன. மண் மற்றும் புதர் மண்டி கிடக்கும் பகிர்மான வாய்க்கால்களை தற்காலிகமாக சீரமைக்க, ஒவ்வொரு மண்டல பாசனத்தின் போதும் பல ஆயிரம் ரூபாய் செலவு பிடிப்பதுடன், பல்வேறு பிரச்னைகளும் ஏற்படுகின்றன. பாசன சங்கங்கள் தங்களது கட்டுப்பாட்டில் இருக் கும் வாய்க்கால்களை பராமரிக்க அரசு நிதி ஒதுக்குவதில்லை. விளைநிலங்களுக்கு செல்லும் மண் வாய்க்கால்களில் உள்ள அனைத்து ஷட்டர்களும் பழுத டைந்துள்ளன. நீர் நிர்வாகத்தில் கடும் குளறுபடி ஏற்படுகிறது. மடை பகுதியிலும் பராமரிப்பு பணிகள் இல்லாததால், மண் வாய்க்காலில் அடித்து வரப்படும் மண் மேடுகள் அனைத்தும் தேங்கி விளைநிலத்துக்கு போதிய தண்ணீர் செல்வதில்லை. அனைத்து பகிர்மான வாய்க்கால்களையும் கான்கிரீட்டாக மாற்றி, ஷட்டர்களை புதுப்பிக்க வேண்டும் என பாசன சங்க நிர்வாகிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

பாசன சபை நிர்வாகிகள் அரசுக்கு அனுப்பியுள்ள மனு: பி.ஏ.பி., மண்டல பாசனத்தில் பல்வேறு காரணங்களால் சாகு படிக்கு தேவையான தண்ணீர் கிடைப்பதில்லை. விவசாயிகள், விவசாயத்தை கைவிட்டு செல்லும் அவல நிலை உள்ளது. தண்ணீர் விரயத்தால் கிளை வாய்க்காலில் பாசன பரப்புக் கேற்ப திறந்து விடப்படும் தண்ணீர்

விளைநிலங்களுக்கு கிடைப்பதில்லை. கிளை வாய்க்கால் கான்கிரீட்டாக மாற்றப்பட்டுள்ளதால் தண்ணீர் விரயம் குறைந்துள்ளது. பகிர்மான வாய்க்காலையும் கான்கிரீட்டாக மாற்ற வேண்டும். நீர்வள நிலவள திட்டத்தில் பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ள நிதியை பொதுப் பணித்துறை மூலம் வாய்க் கால்களை புதுப்பிக்க ஒதுக்கினால், தேவையான தண்ணீர் கிடைத்து, விவசாயிகள் தொழிலை கைவிடும் நிலை மாறும். புதுப்பாளையம் கிளை வாய்க்காலுக்கு உட்பட்ட பகிர்மான வாய்க்கால்களை இரண்டாம் மண்டல தண்ணீர் திறப்புக்கு முன் பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு, அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

**பீன்ஸ், கத்தரிக்காய் விலை சரிந்தது; தங்கம் விலை தகிக்கிறது**

திருப்பூர்: திருப்பூர் மார்க்கெட்டில் பீன்ஸ் மற்றும் கத்தரிக்காய் விலை குறைந்துள்ளது; கோஸ், முருங்கை விலை உயர்ந்துள்ளது. தென்னம்பாளையம் மார்க்கெட்டுக்கு, வழக்கத்தை விட, முருங்கை காய் நேற்று குறைவாக வந்திருந்தது. சீசன் முடியும் தருவாயில் இருப்பதால் விலை அதிகரித்துள்ளது; ஒரு கட்டுக்கு 15 ரூபாய் வரை விலை அதிகரித்து, 25 எண்ணிக்கை கொண்ட கட்டு 35 ரூபாய் வரை விற்பனையானது. வடக்கு உழவர் சந்தை அதிகாரி ராமலிங்கம் கூறியதாவது: கத்தரிக்காய் வரத்து அதிகரித்து, விலை குறையத் துவங்கியுள்ளது. உழவர் சந்தைக்கு வழக்கமாக 2,500 கிலோ கத்தரிக்காய் வரத்திருக்கும்; 4,000 கிலோவாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ 24 ரூபாயில் இருந்து 20 ரூபாயாக குறைந்துள்ளது. தொடர்ந்து வரத்து அதிகரித்தால், அதற்கேற்றவாறு விலை குறையும்; ஊட்டி பீன்ஸ் 45 ரூபாயில் இருந்து 10 ரூபாய் குறைந்து 35க்கு விற்பனையாகிறது. குண்டு மிளகாய் வரத்து முற்றிலும் நின்றுவிட்டது; முட்டைகோஸ் கிலோவுக்கு ஆறு ரூபாய் அதிகரித்து 18 ரூபாய். தக்காளி கிலோ 15 ரூபாய்; வெண்டை 20; புடலை 18; பாகல் 20 முதல் 24 வரை; பீர்க்கன்காய் 24; சுரைக்காய் 8; அரசாணி மற்றும் பூசணி 10; கொத்தவரை 16; பச்சை மிளகாய் சம்பா 34; அவரை 45; முள்ளங்கி 14; தேங்காய் 10; வாழைக்காய் 18; கீரை வகைகள் 15; கொத்தமல்லி 30; கரிவேப்பிலை 30; பெரிய வெங்காயம் 10; சின்ன வெங்காயம் 8 முதல் 15 வரை.

உருளை 14; கேரட் 35; பீட்ரூட் 18; சேனை 18; முருங்கை 15; பீன்ஸ் 35; காலிபிளவர் 12; இஞ்சி 30 முதல் 60 வரை; பூண்டு 60 முதல் 80 வரை; வாழைப்பழம் 15 முதல் 20 வரை; எலுமிச்சை 60; புளி 40; இளநீர் 8 முதல் 10; சப்போட்டா 16; பொறியல் தட்டை 16; மாங்காய் 20 முதல் 22 வரை; மரவள்ளி 8 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது, என்றார்.

**பவுனுக்கு 240 ரூபாய் அதிகம்**: தங்க நகை வியாபாரிகள் சங்க நிர்வாகி கூறுகையில், 'கடந்த ஒரு வாரமாக தங்கம் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வை காசி மாதத்தில் விற்பனை அதிகரிக்கும்; கடந்த ஒரு வாரத்தில், பவுனுக்கு 240 ரூபாய் அதிகரித்துள்ளது. கடந்த புதன்கிழமை கிராம் 1,590; வெள்ளிக்கிழமை 1,605; சனிக்கிழமை 1,610; திங்கள்கிழமை 1,620 ரூபாய்க்கு விற்றது. இதே விலையே இன்றும்(நேற்று) நீடிக்கிறது. கிராம் 1,620; பவுன் 12,960; வெள்ளி கிராம் 30.50 ரூபாய்க்கு விற்கிறது,' என்றார்.

**சாப்பாட்டு இலை ஒரு ரூபாய்**: வாழை இலை வியாபாரி ரத்தினசாமி கூறுகையில், "கடந்தாண்டுகளை விட வாழை இலை வரத்து குறைந்துள்ளது. மழை அளவு குறைந்து, வெயில் அதிகரித்து, விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. எதிர் பார்த்த விற்பனை இல்லாமல், மந்த நிலை நீடிக்கிறது; ரெகுலர் ஆர்டர்களுக்கு மட்டுமே விற்பனை உள்ளது. வைகாசி மாத முகூர்த்த நாட்களின் போது, தேவை இரு மடங்காகும். வைகாசி துவங்கியதும் விலை அதிகரிக்கும் வாய்ப்பும், நல்ல விற்பனையும் எதிர்பார்க்கலாம். 100 இலை கொண்ட கட்டு 270 ரூபாய் வரை; சாப்பாட்டு இலை ஒரு ரூபாய், டிபன் இலை 80 காசுகளுக்கு விற்கப்படுகிறது," என்றார்.

**முட்டை விலையும் உயர்வு**: முட்டை வியாபாரி கணேஷ் கூறுகையில், "ஒரு வாரத்தில் படிப்படியாக 15 காசுகள் விலை அதிகரித்துள்ளது. கொள்முதல் விலையில் ஒரு முட்டைக்கு 2.25 ரூபாயில் இருந்து 2.40 ரூபாயாக உயர்ந்துள்ளது.

மொத்த விற்பனையில் 2.45; சில்லரை விற்பனையில் 2.75 ரூபாய்க்கு விற்கிறது. வெயில் காலம் என்பதால் உற்பத்தி மற்றும் தேவை குறைந்து சமநிலை நீடித்தது. கடலில் மீன் பிடிக்க விதிக்கப்பட்ட தடை காரணமாக, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் முட்டையின் தேவை அதிகரித்து, விலை உயர்வடைந்துள்ளது," என்றார்.

**செவ்வந்தி, ஜாதி முல்லை வரத்தில்லை**: பூ வியாபாரிகள் சங்க செயலாளர் சக்திவேல் கூறுகையில், "மழை பொழிய துவங்கியுள்ளதால், பூக்களின் வரத்தை வியாபாரிகள் எதிர்பார்க்கின்றனர். ஒரு வாரம் கழித்து, பூக்களின் வரத்தை கணிக்க முடியும். வைகாசி மாதம் துவங்கினால், விற்பனையும் அதிகரிக்கும். மல்லிகை கிலோ 60 முதல் 70 ரூபாய் வரை; கனகாம்பரம் 120; முல்லை 120; அரளி 120; பட்டுப்பூ 40; சம்பங்கி 60; மாலை பெரியது 100, சிறியது 30 ரூபாய்க்கு விற்கிறது. ஜாதி முல்லை மற்றும் செவ்வந்தி வரத்து இல்லை; கனகாம்பரத்தின் வரத்தும் குறைந்துள்ளது," என்றார்.

**ஆயில் விற்பனையில் சுறுசுறுப்பில்லை**: சமையல் ஆயில் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறுகையில், "சமையல் எண்ணெய் விலையில் அதிக மாற்றம் ஏற்படவில்லை. கடந்த வாரத் தின் விலையே தொடர்கிறது. வரத்து குறைந்திருந்தாலும், விலை ஏறுவதற்கான வாய்ப்பில்லை. வெயில் காலம் முடியும் வரை விற்பனையில் சுறுசுறுப்பு இருக் காது. நல்லெண்ணெய் கிலோ 89 ரூபாய்; கடலை எண்ணெய் 74; தேங்காய் எண்ணெய் 60; விளக்கெண்ணெய் 80; சூரியகாந்தி எண்ணெய் 58; ரீபன்ட் ஆயில் 84; பாமாயில் 44; நெய் 280 ரூபாய்க்கு விற்கிறது," என்றார்.

அஸ்கா விலை இறங்குமுகம்: தினசரி மார்க்கெட் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில், "அஸ்கா விலை தொடர்ந்து இறங்குமுகமாக உள்ளது. அஸ்கா விலை கிலோவுக்கு ஒரு ரூபாய் குறைந்து, 29 முதல் 30 ரூபாய் வரை விற்கிறது. துவரம் பருப்பு கிலோ 62 முதல் 70 ரூபாய்; பாசி பருப்பு 84; பாசிப்பயிறு 72; வெள்ளை உளுந்து 72; கருப்பு உளுந்து 64; தட்டைபயிறு 44; கொள்ளு 25; சுண்டல் கடலை 32 ரூபாய்க்கு விற்கிறது. கோடை காலம் முடியும் வரை பருப்பு விற்பனை குறைவாகவே இருக்கும்," என்றார்.

---

**இயற்கை சாயம் - இண்டிகோ தயாரிப்பு**

மே 04,2010,16:32 IST

இந்தியாவில் சுமார் 500 வகையான தாவரங்களில் இருந்து சாயங்கள் எடுக்கப்படுகிறது. அவுரி செடியில் இருந்து இண்டிகோ என்னும் சாயம் தயாரித்தலில் வெற்றிகண்டு விவசாயிகளிடம் செயல்முறைப்படுத்தி வருகிறது. விவசாயிகள் இம்முறையினால் செலவு மற்றும் நேரத்தை சேமிக்கிறார்கள். அவுரி செடியில் அனைத்து பச்சை பாகங்களிலும் சாயம் கிடைக்கிறது. ஆனால் இலைகளில் சாயங்களின் அளவு அதிகமாக இருக்கிறது. இளஞ்செடிகளின் இலைகளில் சாயம் குறைவாகவும் வளர்ந்த செடிகளில் இலைகளில் அதிகமாகவும் இருக்கும்.
**சாயம் தயாரிக்கும் முறை:** 1. தொட்டி கட்டுதல்: பழைய நடைமுறைப்படி 15'து15'து13' என்ற அளவிலான பெரிய தொட்டிகள் 2 (மதிப்பு ரூ.75,000 - 1 லட்சம்) தேவைப்படுகிறது. ஒன்றில் தழை ஊறவைக்கவும் (மேல்நிலைத்தொட்டி) மற்றதில் செடிகளின் சாறு கலந்த நீரை ஆக்சிஜனேற்றம் செய்யவும் (கீழ்நிலைத்தொட்டி) பயன்படுத்தப்படுகிறது. ஒரு அடி ஆழத்திற்கு சதுரமாகவோ செவ்வகமாகவோ குழி எடுத்து அதில் மணல், செங்கல் தூளினால் நிரப்பப்பட்டு, அதன்மேல் கம்பி, ஜல்லி கலவையினால் மேடை அமைக்கப்படுகிறது. கட்டும்போதே 4-6' சுற்றளவில் சிமென்ட் வளையங்களை (உறைகள்) தயாரித்துக் கொண்டு இதனை மேடை யின்மீது வைத்து இரண்டு தொட்டிகள் அமைக்க வேண்டும். இரண்டு தொட்டிகளுக்கு இடையில் 2 அடி இடைவெளி இருக்குமாறு அமைக்க வேண்டும். அந்த இடைவெளியில் கலக்கும் இயந்திரத்தை (அஜிடேட்டர்) அமைக்க வேண்டும். தொட்டிகளில் இரண்டு (1'விட்டம்) குழாய்கள் பொருத்தப்பட வேண்டும். ஒன்று சாயத்தை வடித்தெடுக்க தொட்டியின் அடிப்பகுதியிலும் மற்றொன்று கழிவுகளை வெளியேற்ற அடிப்பகுதியில் இருந்து 2" உயரத்திலும் அமைக்க வேண்டும். சாயத்தை கலக்கும்

இயந்திரத்தை இரண்டு தொட்டிகளிலும் பொருத்த வேண்டும்.

**2. சாயம் பிரித்தெடுக்கும் முறை:** தழைகளை (அவுரி) ஊறவைத்தல்: மேற்கூறிய தொட்டிகள் தழைகளை ஊறவைக்கவும் ஆக்சிடேசன் முறை பயன்படுத்தப்படுகிறது. இம்முறைக்கு நைலான் கயிறுகளினால் உருவாக்கப்பட்ட ஊறவைக்கும் வலை அல்லது அமைப்பை பயன்படுத்தப்படுகிறது. நொதித்தலுக்குப் பிறகு தழைகளின் கழிவுகளை வெளியே எடுக்க இந்த அமைப்பானது பெரிதும் பயன்படுகிறது.

**ஊறவைக்கும் வலை தயாரிக்கும் முறை:** அ) 3மி.மீ. இரும்பு கம்பிகளினால் ஆன மூன்று வளையங்களைக் கொண்டு இந்த முழு அமைப்பு உருவாக்கப்படுகிறது. ஒன்று அடிப்பகுதியிலும் இரண்டாவது மையப் பகுதியிலும், மூன்றாவது மேல் பகுதியிலும் பொருத்த வேண்டும். வளையங்களின் சுற்றளவு தொட்டியின் சுற்றளவைவிட 1லிருந்து 2 குறைவாக இருக்க வேண்டும். (ஆ) இவ்வளையங்களைச் சுற்றியும் அடிப்பகுதியிலும் 1-2 மி.மீ. அளவுள்ள நைலான் கயிறினால் தைக்க வேண்டும். பிறகு இந்த அமைப்பு பார்ப்பதற்கு 4 காதுகளைக் கொண்ட ஒரு பெரிய பாரல் போன்று காட்சியளிக்கும். அவுரி தழைகளை ஊறவைக்கும்போது தொட்டியில் பாதியளவு தண்ணீர் இருக் கும் படி பார்த்துக்கொள்ள வேண்டும். பிறகு இந்த வலையமைப்பை தொட்டியின் உள்ளே பொருத்தவேண்டும். தொட்டியின் முக்கால் பகுதிக்கு அறுத்த அவுரி (இண்டிகோ) தழைகளை போடவேண்டும். தழைகளின் மீது கல்லை வைத்து, தண்ணீரில் நன்கு மூழ்கும்படி செய்ய வேண்டும். வலையமைப்பின் காதுகளின் எதிர்எதிர் புறங்களில் மூங்கில் அல்லது சவுக்கு கம்புகளை நுழைத்துக் கட்ட வேண்டும்.

நொதித்தல்: வடிவமைத்துள்ள கலக்கும் அமைப்புடன் மிதிவண்டியின் அமைப்பு இணைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் மீது ஒருவர் அமர்ந்துகொண்டு மிதிப்பதனால் இரண்டு தொட்டிகளையும் ஒருசேர கலக்க முடிகிறது. இந்த அமைப்பின் மூலம் கலக்குவதனால் இண்டிகோ சாயமானது பச்சை கலந்த மஞ்சள் நிறத்திலிருந்து கருநீல நிறமாக மாறுகிறது. கலக்கிய பிறகு சாயம் 3 மணி நேரத்தில் அடியில் படிய ஆரம்பிக்கும்.

**அழுத்தல் முறையில் இண்டிகோ கட்டிகள் தயாரித்தல்:** மர அச்சினால் இண்டிகோ சாயம் கட்டிகளாக அச்சு வார்க்கப்படுகிறது. இதற்கு 2-3 மணி நேரம் ஆகும். இந்த இண்டிகோவை சிறு துண்டுகளாக்கி, வெயிலில் உலரவைத்து, சேமித்து வைக்கப்படுகிறது. தொடர்புக்கு: மெசர்ஸ்.முருகப்பா ஆராய்ச்சி மையம், தரமணி, சென்னை-113, 044-2243 0937.

**-கே.சத்தியபிரபா, 67, சர்வலட்சுமி இல்லம், செல்லம்குடியிருப்பு, உடுமலை.**

**சின்ன சின்ன செய்திகள்**

மே 04,2010,16:31 IST



வாழைக்குள் ஊடுபயிர் கொத்தமல்லி: சொட்டுநீர் பாசன முறையில் சாகுபடி செய்து வறுத்தெடுக்கும் வெயிலில் கூட வளமான வருமானம் பார்த்துவருகிறார் கோவை மாவட்டம் சிறுமுகை அருகே உள்ள சம்பரவள்ளிப்புதூர் விவசாயி எஸ்.விஸ்வநாதன்.

பொதுவாக கொத்தமல்லியை தனிப்பயிராக சாகுபடிசெய்ய வைகாசியிலிருந்து மார்கழி வரை ஏற்ற காலம். மல்லி அதிக வெயிலில் தழையாது. நிழற்பாங்கான இடத்தில்தான் வளரும். தை மாதம் தொடங்கி வைகாசி வரைக்கும் வெயில் இருப்பதால் அதிக வரத்து இருக்காது. பாத்தியின் மேல் தென்னங்கீற்றுகளைப்போட்டு நிழல் ஏற்படுத்தினாலும் 30% அளவுக்குத்தான் தழையும். கோடைகாலத்தில் கொத்தமல்லி தழைக்கு தட்டுப்பாடு இருக்கும். அந்த நேரத்தில் சந்தைக்கு வரும் மல்லிக்கு நல்ல விலை கிடைக்கும். இந்த விபரத்தை கணக்கு பண்ணித்தான் ஐந்து மாத வயதுள்ள வாழைக்கு இடையில் கொத்தமல்லி விதைத்துள்ளார் விவசாயி. 35ம் நாளிலேயே அறுவடைக்குத் தயாராகிவிட்டது என்று கூறும் விஸ்வநாதன் முழுக்க முழுக்க இயற்கை முறையில்தான் விவசாயம் செய்து வருகிறார்.

**ஆத்மா திட்டம்**

திட்ட விபரம் மானியம்

விவசாயிகளுக்கு பயிற்சி

(மாநிலத்திற்குள்) ரூ.750/நபர்

(மாவட்டத்திற்குள்) ரூ.400/நபர்

செயல் விளக்கங்கள் அமைத்தல் ரூ.4000/

**செயல்விளக்கம்**

பிற மாநிலங்களுக்கு பட்டறிவு பயணம் ரூ.600/நபர்

மாநிலத்திற்குள் பட்டறிவு பயணம் ரூ.30/நபர்

விவசாயிகள் ஆர்வலர் குழு பயிற்சி ரூ.5000/குழு

விவசாயிகளுக்குள் கலந்துரையாடல் ரூ.1500/-

சிறந்த விவசாயிகளுக்கான பரிசு ரூ.4000/குழு

பயனாளிகளின் தகுதி: வேளாண்மை / தோட்டக்கலை / மீன்வளம்/ பட்டுவளர்ப்பு/ வேளாண்மை சார்ந்த தொழில் செய்யும் விவசாயி, விவசாய ஆர்வலர் குழு உறுப்பினர்.

தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள்: வேளாண்மை இணை இயக்குனர், துணை இயக்குனர், உதவி இயக்குனர், அலுவலர், துணை வேளாண்மை அலுவலர், உதவி அலுவலர்.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**நவீன தொழில்நுட்பம்**

மே 04,2010,16:30 IST



பாசனநீர் மேலான்மை: பாசனநீரை வயல் முழுவதும் பாய்ச்சுவதால் ஏற்படும் தீமைகள்: தேவைக்கு அதிகமாக தண்ணீரை பாய்ச்சுகிறோம். உதாரணமாக 10 நாளுக்கு ஒரு தடவை நீர் பாய்ச்சும்பொழுது முதல் 2 நாட்கள் அதிக நீர் பிடிப்பினாலும், கடைசி இரண்டு நாட்கள் நீர் பற்றாக்குறை யினாலும் பயிர் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மீதி 6 நாட்கள் மட்டும்தான் சீரான வளர்ச்சி பெறுகிறது. அதாவது 40 சதவீத வளர்ச்சிகுறைகிறது. காரணம், பயிர்கள் நன்குவளர வேர்ப்பகுதியில் நீரின் அளவும் காற்றின் அளவும் சமமாக இருக்க வேண்டும்.

* வரிசையில் பயிரிடும் கரும்பு, பாமாயில் மரம், தென்னை போன்ற தோட்டப்பயிர்களுக்கும் வயல் முழுவதும் நீர் பாய்ச்சுவதால் பயிர்களின் / செடிகளின் இடைவெளியில் களைகள் அதிகம் முளைத்து பயிருடன் சத்துக்கும் நீருக்கும் போட்டி போட்டுக்கொண்டு பயிர் வளர்ச்சியை பெரிதும் குறைக்கிறது.

* உரமிட்ட சமயத்தில் வயலுக்கு அதிகமாக நீர் பாய்ச்சுவதால் உரம் நீரில் கரைந்து மணற்பாங்கான நிலங்களில் கரைந்த உரங்கள் வேர்ப்பகுதியை தாண்டி சென்றுவிடுகிறது. இதனால் நீர் சேதாரம் மட்டுமின்றி உர சேதாரமும் ஏற்படுகிறது.

* வயல் முழுவதும் நீர் பாய்ச்சுவதால் நீர் தேவையும் அதிகரிக்கிறது. இதனால் அதிக பரப்பளவு நீர் பாய்ச்சுவது பாதிக்கப் படுகிறது. மேலும் அதே தண்ணீர் பாய்ச்சு வதால் மண் இறுக்கம் ஏற்படுகிறது.

* பாசன நீர் வேருக்கு கொடுப்பதனால் ஏற்படும் பயன்கள்: கரும்பு, பாமாயில், தென்னை, வாழை போன்ற தோட்டப் பயிர்களுக்கு பாசன நீரை வேருக்கு கொடுப்பது சாலச்சிறந்தது. வேருக்கு நீர் கொடுக்க சொட்டுநீர், நிலத்தடி நீர், பாசன முறை போன்றவை உகந்ததாகும்.

* நீரும் உரமும் போதிய அளவு வேர்ப் பகுதியில் மட்டும் கொடுப்பதால் நீர் சேதாரம், உர சேதாரம் தவிர்க்கப்பட்டு வளர்ச்சி பாதிக்காமல் தொடர் வளர்ச்சி சூழ்நிலை உருவாகி நல்ல மகசூல் கொடுக்கிறது.

* வேருக்கு நீர் கொடுப்பதால் வரிசைக்கு இடைவெளியில் உள்ள இடத்திலும் மரத்திற்கு மரம் உள்ள இடைவெளியிலும் நீர் கொடுக்காததால் அதாவது வயல் முழுவதும் நீர் பாய்ச்சாததால் இடைவெளியில் களைகள் முளைப்பதில்லை. உரம், நீர் முழுவதும் பயிர் வேர்கள் பயன்படுத்திக் கொள்வதால் பயிர்கள் நன்கு வளர்கின்றன.

* சொட்டுநீர் பாசனத்தில் வயலில் உள்ள அனைத்து செடிகளும் மரங்களும் ஒரே நேரத்தில், ஒரே அளவில் நீரை வேர் மூலம் பெறுகின்றன. இதனால் வளர்ச்சியில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை.

* செடியின் வேர்ப்பகுதியில் நீர், காற்று விகிதாச்சாரம் சமமாக இருப்பதால் வேர்கள் வேகமாகவும் ஆரோக்கியமாகவும் வளர வழி ஏற்படுகிறது. மேலும் மண் கடினமாவது தடுக்கப்படுகிறது.

* சொட்டு நீர்ப்பாசனத்தில் 40 சதவீதம் தண்ணீரே போதுமானது. பயிர்களுக்கு தேவையான உரச்சத்துக்களை நீர் மூலமே கொடுப்பதால் சரியான நேரத்தில் சரியான அளவில் எல்லா செடிகளுக்கும் சமமாக கிடைப்பதால் பயிர் நலமாக, வளமாக வளர்ந்து அதிக மகசூல் பெற வழி ஏற்படுகிறது.

**(தகவல்: ரா.வேணுகோபால், வேளாண் நிபுணர், சென்னை-89. 94428 92032)**

**மதுரையில் நஞ்சை புஞ்சை நிலங்களில் கோடை உழவு**

மே 04,2010,16:29 IST



விவசாயிகளுக்கு மகிழ்ச்சியான செய்தி என்னவெனில் இந்த வருடம் தென் மேற்கு பருவமழை தவறாமல் குறித்த காலத்தில் போதுமான அளவு பெய்யும் என்று வானிலை ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். மேலும் மதுரையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதி களிலும் கோடை மழை தேவையான அளவிற்கு பெய்துள்ளது. விவசாயிகள் உடனே தங்கள் நிலங்களில் உழவுப்பணிகளை ஆரம்பித்துவிட்டனர். கோடை மழை புஞ்சை விவசாயத்திற்கும், நஞ்சை விவசாயத்திற்கும் நன்கு உதவும். புஞ்சை விவசாயிகள் கோடை உழவு செய்தால் மண் மேற்பரப்பில் இருக்கும் பயிரின் எஞ்சிய பகுதிகளின் தாள்கள், அடிக்கட்டைகள் மற்றும் களைச் செடிகள் மண்ணுள் செலுத்தப் படுவதால் நன்கு மக்கி உரமாக ஏதுவாகிறது. களைகள் கட்டுப் படுத்தப்படுகின்றன. மேல்பரப்பில் உள்ள வெடிப்புகள் மூடப் படுவதால் மழையில்லா காலங்களில் அடி மண்ணில் உள்ள ஈரம் வெளிப்பட்டு ஆவியாவது தடைபடுகிறது. மேலும் மண்ணில் உள்ள பயிரை அழிக்கும் பூச்சிகளின் கூட்டுப்புழுக்கள் வெளி கொணரப்பட்டு சூரிய வெப்பம், பறவைகள் மற்றும் இயற்கை எதிரிகளால் அழிக்கப்படுகின்றன.

கோடை உழவு செய்யும்போது நிலத்தின் சரிவுக்கு குறுக்காக உழவு செய்யப்படுதல் வேண்டும். இதனால் மண்ணில் ஈரத்தன்மை அதிகரிப்பதோடு மண் அரிப்பும் தடுக்கப்படுகிறது. நஞ்சை நிலங்களில் டிராக்டர் டில்லர் கருவியை உபயோகித்து கோடை உழவு செய்ய வேண்டும். இதுசமயம் நஞ்சை நிலங்களில் எலிகளின் இனப்பெருக்கம் தடுக்க முயற்சிகள் எடுக்கலாம். வயல்களில் நேரிடையாக வரப்புகளை வெட்டி எலிகளை அழிக்க முயற்சிகள் எடுக்கலாம். நிலத்தினை புழுதியாகும் அளவிற்கு உழுதுவிடலாம். இது சமயம்மூன்று பங்கு புழுதி ஒரு நிலத்தின் வளத்தை அதிகரிக்க நல்ல சத்துள்ள தொழு உரம், வண்டல் அல்லது மண்புழு உரம் இட்டு நிலத்தில் கலைத்துவிடலாம். பூமியை உழும்போது மேடு பள்ளம் இல்லாமல் நடவு பூமியை சமமாக வைத்துக்கொள்ளலாம். அணைக்கட்டு நீர், கால்வாயில் தடையின்றி ஓடிவர கால்வாய்களை சுத்தப்படுத்தி வைத்துக் கொள்ளலாம். விவசாயிகள் கால்வாயில் தண்ணீர் வந்தமேல் நஞ்சை நிலங்களில் என்ன கருவி களை பயன்படுத்த வேண்டு மென்பதை தீர்மானம் செய்துகொள்ளலாம். தற்போது பவர் டில்லர், டிராக்டர் டபுள் கேஜ்வீல் மற்றும் டிராக்டருடன் இணைந்த ரோட்டாவேட்டர் போன்ற கருவிகள் உள்ளன. துரித

சாகுபடிக்கு பவர் டில்லர் சரிப்பட்டு வரவில்லை. ஆதலால் விவசாயிகள் கேஜ் வீல் மற்றும் ரோட்டாவேட்டர் கருவியை பயன்படுத்தலாம். நஞ்சை நிலத்தில் மேடு பள்ளம் இல்லாமல் சமனாக இருந்தால்தான் நீர் பாசனத்தில் சிக்கனம் காண முடியும். கேஜ் வீல் உபயோகிக்கும்போது பரம்படிக்கும் பணியை சீராக செய்ய இயலுவதில்லை. அதனால் அதிக மகசூல் எடுக்க இயலுவதில்லை. ஆனால் 50 குதிரைசக்தி கொண்ட டிராக்டரால் இயக்கப்படும் ரோட்டாவேட்டரை பயன்படுத்தி நஞ்சை நிலத்தை உழுதால் நிலம் நன்கு சேறு கலக்கப் படுகிறது. பூமியில் வளர்ந்துள்ள களைச்செடிகள் பசுந்தாள் உரச்செடிகள் இவைகள் பூமியில் மடக்கி உழப்படுகின்றன. ரோட்டாவேட்டர் கருவியையும் இரண்டு ஓட்டுனர்களையும் பயன் படுத்தினால் ஒரு நாளில் (காலை 4 மணியிலிருந்து இரவு 8 மணி வரை) 15 ஏக்கர்களில் நடவுப்பணிகள் செய்ய நடவு வயலை தயார் செய்துவிடலாம் என்கிறார் கருப்பாயூரணியைச் சேர்ந்த பிரபல விவசாயி தர்மராஜன். விவசாயிகள் நம்பிக்கையோடு பணிகளை செய்தால் இந்த வருடம் நல்ல வெற்றியே கிடைக்கும்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

**தினத் தந்தி**

***நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில், மத்திய அரசுக்கு உணவு மானியச் செலவினம் ரூ.6,000 கோடி அதிகரிக்கும்***

*பிரபா ஜெகன்னாதன்*
*புதுடெல்லி*

*இந்தியாவில் வறுமை கோட்டிற்கு கீழ் வசிப்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனையடுத்து நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசின் உணவு மானியச் செலவினம் ரூ.6,000 கோடி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து மத்திய அரசின் மொத்த உணவு மானியச் செலவினம், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.1 சதவீதம் என்ற அளவில் இருக்கும். இது, சென்ற நிதி ஆண்டில் 0.3 சதவீதமாக இருந்தது.*

*திட்டக்குழு*

*மத்திய திட்டக்குழு மதிப்பீட்டின்படி வறுமை கோட்டிற்கு கீழ் வசிப்பவர்கள் எண்ணிக்கை 6.52 கோடியாகும். அதேசமயம் தெண்டுல்கர் குழு அறிக்கையின்படி இது, 7.40 கோடியாகும். உணவு பாதுகாப்புச் சட்டப்படி, மத்திய அரசு ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றிற்கு 35 கிலோ உணவு தானியங்களை ஒரு கிலோ ரூ.3 என்ற விலையில் வழங்க வேண்டும். மத்திய அரசு ஒரு கிலோ உணவு தானியத்திற்கும் மட்டும் ரூ.17 மானியம் வழங்குகிறது. இதனடிப்படையில் வறுமை கோட்டிற்கு கீழ் வசிக்கும் ஒரு குடும்பத்திற்கு ஓர் ஆண்டிற்கு மத்திய அரசு ரூ.7,140 செலவு செய்கிறது. தெண்டுல்கர் குழு அறிக்கைபடி 7.40 கோடி பேருக்கு மத்திய அரசுக்கு ரூ.52,800 கோடி செலவாகும். இது, திட்டக்குழுவின் மதிப்பீட்டான ரூ.46,600 கோடியைக் காட்டிலும் ரூ.6,200 கோடி அதிகமாகும். சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டிற்கு உணவு மானியச் செலவினத்திற்காக ரூ.56,000 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. அண்மைக்கால மதிப்பீட்டின்படி இந்தச் செலவினம் ரூ.72,200 கோடியாக அதிகரித்துள்ளது. இந்நிலையில் நடப்பு நிதி ஆண்டிற்கு உணவு மானியத்திற்காக ரூ.55,578 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி போதாது என்றும் மேலும் அதிக நிதி தேவைப்படும் என்றும் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.*

*கச்சா எண்ணெய்*

*இந்நிலையில் சர்வதேச சந்தைகளில் கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதையடுத்து எண்ணெயை சந்தைபடுத்தும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு ரூ.1 லட்சம் கோடி இழப்பு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசு இதற்காகவும் மானியம் வழங்குகிறது. இதுபோன்ற காரணங்களால் மத்திய அரசின் மானியச்சுமை, மேலும் அதிகரிக்கும் என்று கருதப்படுகிறது.*

***சென்ற ஏப்ரல் மாதத்தில் இயற்கை ரப்பர் உற்பத்தி 59,500 டன்னாக உயர்வு***

*நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 59,500 டன் இயற்கை ரப்பர் உற்பத்தியாகி உள்ளது. இது, சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட 15.5 சதவீதம் (51,520 டன்) அதிகமாகும். ரப்பர் விளையும் முக்கிய பகுதிகளில் கோடை காலத்தில் நல்ல அளவில் மழைப்பொழிவு இருந்ததால் ரப்பர் உற்பத்தி*

*அதிகரித்துள்ளதாக ரப்பர் வாரியம் தெரிவித்துள்ளது.*
*வாகன டயர்கள் தயாரிப்பு நிறுவனங்களுக்கு அதிக அளவில் ரப்பர் தேவைப்படுவதால் இதன் விலை மிகவும் அதிகரித்து வந்தது. குறிப்பாக, ஆர்.எஸ்.எஸ்–4 வகை ரப்பரின் விலை (100 கிலோ) கோட்டயம் சந்தையில் ரூ.16,950–ஆக மிகவும் அதிகரித்து காணப்பட்டது. நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரப்பர் பயன்பாடும், சென்ற ஆண்டின் இதே மாதத்தைவிட 7.5 சதவீதம் அதிகரித்து 79,000 டன்னாக உயர்ந்துள்ளது.*
*சர்வதேச சந்தையில் ரப்பரின் விலை மிகவும் அதிகரித்து இருந்ததால், சென்ற ஏப்ரல் மாதத்தில் ரப்பர் இறக்குமதி 41 சதவீதம் சரிவடைந்து 6,128 டன்னாக குறைந்து போனது.*
*நடப்பு 2010–11–ஆம் ஆண்டில், நாட்டின் ரப்பர் உற்பத்தி 8,93,000 டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டு உற்பத்தியை விட 7.5 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.*

## காங்கேயம் காளைகளை அழிவில் இருந்து காக்க வேண்டும் காங்கிரஸ் கோரிக்கை

*சென்னை, மே.5–*
*காங்கேயம் காளைகளை அழிவில் இருந்து காக்க வேண்டும் என்று சட்டசபையில் காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்தது.*
*தமிழக சட்டசபையில் கால்நடைபராமரிப்பு, மீன்வளம் மற்றும் பால்வளத்துறைகள் தொடர்பான மானிய கோரிக்கை மீதான விவாதம் நேற்று நடைபெற்றது. அதன் விவரம் வருமாறு:–*
*இலங்கை கடற்படையினர்...*
*லீமா ரோஸ் (மார்க்சிஸ்ட்):– கடலோர மீன்பிடித் தடைச்சட்டம் அமலில் இருக்கும்போதே, தற்போது வேறொரு விதிமுறை தொடர்பாக இணையதளத்தில் மக்களிடம் மத்திய அரசு கருத்து கேட்டுள்ளது. இது மக்களை பாதிக்காமல் இருப்பதை தமிழக அரசு பார்த்துக் கொள்ள வேண்டும். திசை மாறிச் சென்றுவிடும் மீனவர்களை, இலங்கை கடற்படையினர் சிறைபிடிப்பது தொடர்கிறது. இதனால் ராமேசுவரம், நாகை, புதுக்கோட்டை பகுதி மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.*
*பழனிசாமி (காங்கிரஸ்):–பால் உற்பத்தியாளர் சங்கம் சார்பில் வரும் 17–ந் தேதி போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளார்கள்.*
*பாலை சாக்கடையில் ஊற்றுவதா?*
*அமைச்சர் மதிவாணன்:– கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் பால் காவடி எடுக்கிறார்கள். ஆனால், பால் உற்பத்தியாளர்கள் போராட்டம் நடத்தும்போது பாலை, தரையில் ஊற்றுகிறார்கள். சாக்கடையிலும் ஊற்றுகிறார்கள். அவ்வாறு ஊற்றப்படுவது பாலாக இருக்காது. அவர்கள் பால் உற்பத்தியாளர்களாகவும் இருக்க மாட்டார்கள்.*
*பழனிசாமி:– சென்னையில் ஆவின் பால் சப்ளை எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை. அது தேவையான அளவுக்கு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தனியார் பால் பாக்கெட் தயாரிப்பாளர்கள், பால் உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை தருகிறார்கள். அது எப்படி கட்டுபடியாகிறது? தனியார் பால் உற்பத்தியாளர்கள், பாலில் தாவர கொழுப்பை கலப்பதாக கேள்விப்படுகிறோம்.*
*புகழ் பெற்ற காங்கேயம் காளை இனம் அழிந்து வருகிறது. அதை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டும். அது சாப்பிடும் உணவு கொஞ்சமாக இருந்தாலும் அதிக பால் தரக்கூடியது.*
*பிரேசில் நாட்டில் காங்கேயம் காளை இனவிருத்தி சங்கத்தை அமைத்து ஒன்றரை லட்சம் காங்கேயம் பசுக்களை வளர்த்து வருகிறார்கள். அங்கு இறைச்சிக்கும், பாலுக்கும் அவற்றை பயன்படுத்துகிறார்கள்.*
*டீசல் போதுமானதாக இல்லை*
*உதயம் சண்முகம் (தி.மு.க.):– மீனவர்களுக்கு நிவாரணத் தொகையை உயர்த்தித் தரவேண்டும். மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வரும் டீசல் போதுமானதாக இல்லை. அதனை உயர்த்தித்தரவேண்டும்.*
*ராமச்சந்திரன் (சுயேச்சை):– மீனவர் நல வாரியத்துக்கு தனி அலுவலர்களை நியமிக்க வேண்டும்.*
*செந்தில்பாலாஜி (அ.தி.மு.க.):– சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அ.தி.மு.க. ஆட்சியில் 8 ஆயிரம் வீடுகள் கட்டித்தரப்பட்டது.*
*அமைச்சர் கே.பி.பி.சாமி:–8 ஆயிரம் வீடுகள் என்பது தவறான தகவல். அவைக்கு தவறான தகவலை தருகிறார். அ.தி.மு.க. ஆட்சியில், சுனாமியால் பாதித்தவர்களுக்கு ஒரு வீடு கூட கட்டித்தரப்படவில்லை.*
*இவ்வாறு விவாதம் நடந்தது.*

## இயற்கை முறை தேயிலை சாகுபடிக்கு உலக அளவில் பெரும் வரவேற்பு செயல் இயக்குனர் தகவல்

*குன்னூர், மே.5–*

இயற்கை முறையில் தயாரிக்கும் தேயிலை தூளுக்கு உள்நாடுகளில் மட்டுமல்லாமல் உலக அளவில் பெரும் வரவேற்பு கிடைக்க பெற்றுள்ளதாக தேயிலை வாரிய தென்மண்டல செயல் இயக்குனர் ஆர்.டி.நசீம் கூறினார்.

இயற்கை உரம்

தேயிலை சாகுபடியில் ரசாயன உர பயன்பாடு அதிகமாக உள்ளது. உலகள வில் ஜெர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் இயற்கையான முறையில் தயாரித்த தேயிலை தூளுக்கு நல்ல வரவேற்பும், கிராக்கியும் உள்ளது.

நீலகிரி உள்ளிட்ட தென் இந்தியாவில் இயற்கை முறை தேயிலை உற்பத்தியை அதிகப் படுத்த தேயிலை வாரியம் தீவிரம் காட்டி வருகிறது. குன்னூர் தேயிலை வாரியமும், உபாசி தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் தேயிலை தயாரிப்பது குறித்து முதற்கட்ட ஆலோசனை கூட்டம் குன்னூர் உபாசி அரங்கில் நடைபெற்றது.

மானியத்துடன் உதவி

இதில் கலந்து கொண்ட தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் ஆர்.டி. நசீம் பேசும் போது கூறிய தாவது:–

ரசாயன உரம் பூச்சிக் கொல்லி மருந்துகள் இல்லா மல் இயற்கையான முறையில் தேயிலை செடிகளை வளர்க்க வேண்டும். நாற்றுக்களை மூன்று ஆண்டுகள் இயற்கை யான முறையில் செடிகளை வளர்க்க வேண்டும்.

இயற்கையான முறையில் தயாரிக்கும் தேயிலை தோட்டத்திற்கும், எஸ்டேட்டிற் கும், தொழிற்சாலைகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படு கின்றன. இவ்வாறு செய்யப் படும் நிறுவனங்களுக்கும், சிறிய, பெரிய விவசாயிகளுக்கும் மானியத்துடன் கூடிய உதவி கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

இயற்கை முறை சாகுபடி

தென்னிந்தியாவில் மொத்தம் 280 ஏக்கர் பரப்பள வில் இயற்கையான முறையான தேயிலை சாகுபடி மேற் கொள்ள புதிய சட்டத்தை தேயிலை வாரியம் மேற் கொண்டுள்ளது. இந்த பணி டாடா நிறுவனத்தின் மூலம் நடைபெற உள்ளது.

நீலகிரியில் தற்போது பழனியப்பா தேயிலை தோட்டத்தில் 20 ஹெக்டர் பரப்பளவில் இயற்கை முறை யிலான தேயிலை சாகுபடி மேற்கொண்டு வருகின்றனர்.இவர்களை தேயிலை வாரியம் ஊக்குவித்து வரு கின்றது.

வரவேற்பு

இயற்கை முறை சாகுபடிக்கு அதிக பணம் செலவு இல்லை. பசுவின் சாணம், செடி இலை, தழை களை கொண்டு உரமாக பயன் படுத்தி வருகின்றனர். பூச்சி கொல்லிகளுக்கு வேப்பம் கொட்டைகளை பயன்படுத்தி சாகுபடி செய்ய முடியும் என ஆய்வில் கூறப்பட்டு உள்ளது.

ரசாயனம் மூலம் தயாரிக்கப் படும் தேயிலையை விட இயற்கையான முறையில் தயாரிக்கும் தேயிலைக்கு 20 சதவீதம் கூடுதல் விலை கிடைக்கிறது. இயற்கை முறை தேயிலை சாகுபடிக்கு உள்நாடுகள் மட்டுமின்றி உலக அளவில் பெரும் வரவேற்பு உள்ளது. இயற்கை உர தேயிலை சாகுபடியை ஒருவர் மட்டும் செயல்படுத்தாமல் குழுவாக ஒன்றிணைந்து செயல்பட்டால் தேயிலை விவசாயம் செழிப்படையும். இதனை அனைவரும் கடை பிடிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**கூடலூர் பகுதியில் கிராம்பு விளைச்சல் அமோகம்**

கூடலூர், மே.5–

கூடலூர் பகுதியில் பணப்பயிர்களான இஞ்சி, குறுமிளகு, ஏலக்காய், காபி, தேயிலை பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன.இதுதவிர சமவெளி காய்கறிகளும் விளைகின்றன. ஒவ்வொரு காலநிலைகளுக்கு ஏற்ப வெவ்வேறு வகையான பயிர்கள் விளைகின்றன. தற்போது கிராம்பு பயிர்கள் அதிகளவு விளைந்துள்ளன. இதனால் நல்ல விலை கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். தொடர்ந்து அவ்வப்போது சாரல் மழை பெய்து மிதமான தட்பவெப்ப காலநிலை நிலவுவதால் கிராம்பு விளைச்சல் இன்னும் அதிகரிக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். கூடலூர் ஓவேலி பகுதியில் கிராம்பு பயிர் அதிகளவு விளைந்துள்ளது.குன்னூர் ஏல மையத்தில்

**48 சதவீத தேயிலை தூள் தேக்கம்**

குன்னூர், மே.5–

குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 17–க்கான ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு மொத்தம் 16.71 லட்சம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் இலை ரகம் 10.89 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.92 லட்சம் கிலோவும் அடங்கும். உள்நாட்டு வர்த்தகத்தை பொறுத்த வரை, வழக்கமாக பங்கெடுக்கும் ஆந்திரா, கர்நாடகா, குஜராத், பஞ்சாப் மாநில வர்த்தகர்களின் பங்களிப்பு குறைவாக இருந்தது. ஏற்றுமதி வர்த்தகத்தை பொறுத்த வரை ரஷ்யா, பாகிஸ்தான் வர்த்தகர்கள் மட்டும் பங்கெடுத்து ஓரளவு தேயிலை தூளை வாங்கினார்கள்.

வர்த்தகம் களை கட்டாததால், 48 சதவீதம் தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. அனைத்து ரக தூளின் விலையும் கிலோவிற்கு 2 ரூபாய் குறைந்தது. சி.டி.சி. ரகத்தில் கோத்தகிரி விக்னேஷ்வரா தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு கிலோவுக்கு அதிகபட்சமாக 160 கிடைத்தது. 40–க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை

பெற்றன.
ஆர்தோடக்ஸ் ரகத்தில் மஞ்சூர் அருகே உள்ள சாம்ராஜ் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு 173 ரூபாய் விலை கிடைத்தது. 20–க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. இலை ரகத்தின் சாதாரண ரக தூளின் விலை 46 ரூபாயில் இருந்து 51 ரூபாயும், சிறந்த ரக தூளின் விலை 85 ரூபாயில் இருந்து 100 ரூபாயும், டஸ்ட் ரகத்தின் சாதாரண தூளின் வகை 48–ல் இருந்து 52 ரூபாய் வரையிலும், சிறந்த ரக தூளின் விலை 90 ரூபாயில் இருந்து 124 ரூபாய் வரையிலும் விற்பனை யானது. விற்பனை எண் 18–க்கான ஏலம் வருகிற 6,7 ஆகிய தேதிகளில் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்துக்கு மொத்தம் 23.21 லட்சம் கிலோ தேயிலை தூள் வருகிறது. இதில் இலை ரகம் 13.27 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 7.96 லட்சம் கிலோவும் அடங்கும்.

**தேயிலை விலை வீழ்ச்சி அடையாமல் இருக்க டீசர்வ் கம்ப்யூட்டர் ஏல மையத்தை மீண்டும் இயக்க கோரிக்கை**

**கூடலூர் சாலீஸ்பரி தொழிற்சாலை உறுப்பினர்கள் வேண்டுகோள்**

கூடலூர், மே.5–
தேயிலை விலை வீழ்ச்சி அடையாமல் இருக்க மீண்டும் டீசர்வ் கம்ப்யூட்டர் ஏல மையத்தை இயக்க வேண்டும் என கூடலூர் சாலீஸ்பரி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை உறுப்பினர்கள் அரசுக்கு வேண்டு கோள் விடுத் துள்ளனர்.
உறுப்பினர்கள் மனு
குன்னூரில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை களுக்காக டீசர்வ் கம்ப்யூட்டர் ஏல மையம் நடைபெற்று வந்தது. இந்த ஏல மையம் கடந்த சில நாட்களுக்கு முன்பு திடீரென்று மூடப்பட்டது. இதனால் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு பச்சை தேயிலை வழங்கும் உறுப் பினர்களாகிய விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். அதனை திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகிறார்கள்.
இந்த நிலையில் கூடலூர் சாலீஸ்பரி தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை ஆலோசனை குழு உறுப்பினர் கள் முருகன், நாராயணன், அசைனார், மணிகண்டன் ஆகியோர் ஊரக தொழில் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சருக்கு அனுப்பி யுள்ள மனுவில் கூறியுள்ள தாவது:–
நீலகிரி மாவட்டத்தின் முதுகெலும்பாக தேயிலை விவசாயம் உள்ளது. பெரிய, சிறு மற்றும் குறு விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடு பட்டு வருகின்றனர். பெரிய தேயிலை தோட் டங்களில் உற்பத்தியாகும் பச்சை தேயிலை தனியார் தேயிலை தொழிற்சாலைகள் மூலமும், சிறு மற்றும் குறு தேயிலை விவசாயிகளின் பச்சை தேயிலை நீலகிரி மாவட்டத் தில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளின் மூலமும் தேயிலை தூளாக உற்பத்தி செய்யப்பட்டு சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
மந்த நிலை
கடந்த சில ஆண்டுகளாக எல்லா தேயிலை தொழிற் சாலைகளின் தூள்களும் இடைத்தரர்கள் மூலம் குன்னூர், கோவை, கொச்சி ஆகிய இடங்களில் விற்பனை செய்யப்பட்டு வந்தது.
இதனால் தேயிலை விலையில் மந்த நிலை நிலவி வந்தது. இதையொட்டி அர சால் டீசர்வ் என்ற கம்ப்யூட்டர் ஏல மையம் இன்கோசர்வ் மூலம் தொடங்கப்பட்டு 31–03 –2010 வரை நல்ல முறையில் இயங்கி வந்தது. தேயிலை தூள்களுக்கும் நல்ல விலை கிடைத்து வந்தது. இதனால் தேயிலை விவசாயிகள் மிகுந்த பயன்பெற்று வந்தனர்.
கம்ப்யூட்டர் ஏல மையம் மீண்டும் இயக்க வேண்டும்
ஆனால் டீசர்வ் ஒப்பந்த தாரராக பணியாற்றி வந்த சி.எம்.சி. நிறுவனம் தங்களுக்கு ஒப்பந்த தொகை கட்டுப்படி யாக வில்லை எனக்கூறி தங்களது ஒப்பந்த காலத்தை நீடிக்க முடியாது என மறுத்து விட்டன. இதனால் டீசர்வில் தேயிலை ஏல விற்பனை தற்காலிகமாக நிறுத்தி வைக் கப்பட்டது. இதனை தவிர்க்க மாற்று நடவடிக்கை எடுக் கப்பட வில்லை. இதனால் கூட்டுறவு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள்கள் சரிவர விற் பனை செய்ய முடிவதில்லை.
கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளை நம்பியுள்ள சிறு– குறு விவசாயிகளின் வாழ் வாதாரங்களை காப்பாற்றி டவும், தேயிலைக்கு மீண்டும் நல்ல விலை கிடைத்திட டீசர்வ் ஏலமையம் மீண்டும் இயங்கிட வேண்டும். எனவே தாங்கள் நடவடிக்கை எடுக் கும்படி கேட்டுகொள்கிறோம்.
இவ்வாறு அந்த மனுவில் கூறி உள்ளனர்.
இதேபோல் தமிழக கதர் வாரியத்துறை அமைச்சர் ராமச்சந்திரன், மாவட்ட கலெக்டர், சென்னை தொழில் வணிக இயக்குனர் ஆகியோ ருக்கும் மனு அனுப்பப் பட்டுள்ளது.